634

634
1-56

REGISTERED No. M. 6165. அணா 2

FATH-HUL-ISLAM

பத்ஹுல் இஸ்லாம்

OFFICE OF THE REGISTRAR OF ...
1 - FEB 1956
MADRAS

மாத பத்திரிகை

பிப்ரவரி 1956.

விஷயம்.	பக்கம்.
இஸ்லாம் மதத்தில் துறவறம் இல்லை	1
சன்மார்க்க சங்கே (கவிஞர் சாந்திதாசன்)	7
இரத்தச் சின்னம் (தொடர் கதை)	9
திருக் குர்ஆன் சார சங்கிரஹம் (ரஹ்மத் பாகவி)	23
மூளை பலத்தால் முன்னேறியவர் (முஹம்மது தாவூது)	29

... இஸ்லாம் ஆபீஸ் :
...ரோட், திருவல்லிக்கேணி,
மதராஸ் 5.

3L
Q7ﾭ211, N24F1
N56
187049

பத்ஹுல் இஸ்லாம்.

சந்தா விபரம்: இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு

வருஷ சந்தா	ரூ.	1–8–0
தனிப் பிரதி	அணா.	0–2–0
மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா	ரூ.	2–0–0

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
பத்ஹுல் இஸ்லாம்,
20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

இங்லீஷ் உர்து, உர்து-இங்லீஷ் அகராதிகள்

இங்கிலீஷ் உர்து பெரியது	விலை ரூ. 9—8—0
உர்து இங்கிலீஷ் பெரியது	விலை ரூ. 9—8—0
இங்கிலீஷ் உர்து சிறியது	விலை ரூ. 3—0—0
உர்து இங்கிலீஷ் சிறியது	விலை ரூ. 3—0—0

இங்லீஷ் குர்ஆன்

திருக் குர்ஆனின் இங்கிலீஷ் மொழி பெயர்ப்பு; முஹம்மது மர்மடூக் பிக்தால் அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது 464 பக்கங்கள் கொண்டது. விலை ரூ. 3—0—0

ஷை குர்ஆன் அறபு வாக்கியங்களும் சேர்ந்தது. இரண்டு பாகங்களும் சேர்ந்தது. ரூ. 15—0—0

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்
கெ.20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

فتح الإسلام

'பத்ஹுல் இஸ்லாம்'

பிப்ரவரி—1956.

இஸ்லாம் மதத்தில் துறவறம் இல்லை.

"இஸ்லாம் வைதீக மதம், அது இலௌகீகத்துக்கு ஏற்ற தல்ல" என்று இக்காலத்தில் சில பேர்வழிகள் சொல்லி வருகிறுர்கள். உண்மையில் தீனுல் இஸ்லாம் வைதிகம் என்னும் இயற்கைக்கும் இலௌகிகம் என்னும் செயற்கைக்கும் முழுதும் ஒத்து அமைந்த சீரிய சன்மார்க்கமாகும்.

"பணம் காசு சம்பாதிக்கக் கூடாது; சுகபோகம் அனுபவிக்கக் கூடாது" என்று இஸ்லாம் மதம் போதிப்பதாக ஒரு சில அறியாதார் கூறுகின்றனர். இதுவும் சரியல்ல. பரிசுத்த தீனுல் இஸ்லாத்தில், பணம் காசு சம்பாதிப்பது விலக்கப்பட்டில்லை; நிறைய பணம் சம்பாதித்துப் பணக்காரர் ஆகலாம். பூஸ்திதி வீடு வாசல் பங்களாக்கள் கட்டி ஆளலாம்; நல்ல உணவு உண்டு சுகமாக வாழலாம்; ஒன்றுக்கு மேற்பட்டு நான்கு மனைவியர் வரை மணந்து நியாயமான முறையில் சுகபோகமாக வாழலாம். இதற்கெல்லாம் தீனுல் இஸ்லாத்தில் எவ்வித தடையும் கிடையாது.

இஸ்லாம் மதமானது தனது பக்தகோடிகளாகிய முஸ்லிம்களுக்கு, பக்தி வணக்க ஒழுக்க ஆசார விஷயங்களில் நல்வழி காட்டுவதைப் போலவே தான் தொழில், வியாபாரம், பொருளீட்டல், காரியாதிகளை நடத்தல் முதலிய உலக சம்பந்தமான விஷயங்களிலும் நல்வழி காட்டிவருகிறது. இஸ்லாம் இறுதி காலத்துக்காக தோன்றிய பரிபூரண சன்மார்க்கமாதலின், இதில் எவ்விதக் குறைபாடுமின்றி,

சகல விஷயங்களும் பரிபூரணமாய் போதித்து வழி காட்டப்பட்டிருக்கின்றன.

"லா ரஹ்பானிய்யத்த பில் இஸ்லாம்"—இஸ்லாத்தில் துறவறம் கிடையாது என்பது நம் திருமறை வாக்கியம். அதாவது உலகத்தையும் இன்பசுகங்களையும் வெறுத்து, மனைவிமக்கள் வீடுவாசல்களின் ஆசையும் பற்றும் கொள்வதைத் துறந்து, வெறும் சுயாத்மத் தேவையைப் பற்றி மட்டும் சிரத்தை கொண்டு, ஞான வழியில் மாத்திரம் ஈடுபட்டு, வாழ் நாளை வீழ்நாளாக்கிக் கொள்ளும் சன்னியாஸ வாழ்வு அல்லது பாதிரித் தன்மையான வாழ்வு அல்லது கன்னியாஸ்திரியாகவே காலங் கழித்து விடும் அவல வாழ்வுக்கு தீனுல் இஸ்லாத்தில் அனுமதி கிடையாது.

அதாவது மனைவி மக்களையும் வீடு வாசல்களையும் போஷித்துப் பாதுகாத்து நிர்வகிக்கும் குடும்பப் பொறுப்பை, சோம்பேறித்தனத்தாலோ ஞானம் பிறந்து விட்டதென்ற வேறு காரணத்தாலோ விட்டு விட்டு, பக்கீர்களாகவோ, பீர் முர்ஷித்களாகவோ, தர்வேஷ்களாகவோ, ராஹிபுகளாகவோ, சாது சன்யாஸிப் பாதேசிகளாகவோ போய்விடக் கூடாதென்பதே இஸ்லாம் மதத்தின் அழுத்தந்திருத்தமான கட்டளையாகும்.

உலகில் மனிதராகப் பிறந்தவர் மனிதராகவே சகல விதப் பொறுப்போடும் வாழ வேண்டுமே யல்லாது, மரம் மட்டை போலவும், கல்கறடு போலவும், ஆடு மாடுகளைப் போலவும் பொறுப்பற்றதனமாய், சுயநல வாழ்வு வாழக் கூடாதென்பதே இஸ்லாத்தின் கட்டளையாகும். மேலும் இன ஜனசமூக ஊழியத்தில் தான் மனுஷ்ய தர்மம் அடங்கி யிருக்கிற தென்பது இஸ்லாத்தின் உயர் லக்ஷியமாகும்.

"ஷர்உ முஹம்மதீ" என்பது நபிகள் நாயகம் முஹம்மத் ரஸூலுல்லாஹி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள், எல்லாம் வல்ல அல்லாஹு தஆலாவின் உத்தரவின் பிரகாரம், திருக்குர்ஆன் போதனைக் கேற்ப மனித சமுதாயம் உலகில் எங்ஙனம் வாழ வேண்டும் என்பதை 'ஸுன்னத்' என்னும் சுய செயல் முறை மூலமாக கற்பித்துக் கா[illegible]ன்மார்க்கம் என்னும் வழிப்பாடாகும். இதை முஸ்லிம்களாகிய நாம் ஷரீஅத்தே முஹம்

187049

இஸ்லாம் மதத்தில் துறவறம் இல்லை

மதிய்யா என்றும் ஸுன்னத்து வல்ஜமாஅத்து என்றும் இஸ்லாமிய சம்பிரதாயம் என்றும் பல பெயர்களைக் கொண்டு உச்சரிக்கின்றோம்.

இந்தப் புனித ஷரீஅத்தே முஹம்மதிய்யாவை, இன்றைய உலகில் சுமார் 80 கோடி பேர்கள் அனுஷ்டித்து வருகிறார்கள். அதாவது அகில உலகத்திலும் 80 கோடிக்கு மேற்பட்ட முஸ்லிம்கள் இஸ்லாமிய ஷரீஅத் எனும் சம்பிரதாயத்தை அனுஷ்டித்து வருகிறார்கள்.

ஒவ்வொரு முஸ்லிமும், தனக்காகவும் தனது மக்கள் அல்லது தாய் தந்தை அல்லது இனபந்து ஜனங்களுக்காகவும் உலக சம்பாத்தியங்களை தாராளமாக சம்பாதித்து பணம் சேமித்து வாழலாம்-வாழ வேண்டும் என்றே மூலதாரக் கோட்பாடு உடையவர்களாக இருந்து வருகிறார்கள். ஆனால் இறைவனையும் தொழுகை பக்தி முதலிய வழிபாட்டையும் மறந்து விடக் கூடாதென்பது முக்கியமான கட்டளையாகும்.

"துன்யா என்னும் உலகத்தையும் விரும்பிக் கொண்டு, ஆகிரத் என்னும் ஆத்மார்த்த சாதனமும் பெற்றுய்வ தென்பது எங்ஙனம் முடியும்; வைதீகம் வேறு, இலௌகிகம் வேறு; இரண்டு வழிகளும் எப்படி ஒன்றாய் விடும்?" என்று சில பேர்வழிகள் விவாதம் செய்கிறார்கள். இப்படிப் பட்டோர், நமது நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களின் புனித ஜீவித வாழ்வு முறையை மட்டுமே ஆராய்ந்து சீர்தூக்கிப் பார்ப்பார்களாயின், அதுவே அவர்களுக்குப் போதிய படிப்பினை தரும். இப்படி சந்தேகப்படுவோர், புதிதாக ஆராய்ச்சி யொன்றும் செய்ய வேண்டியதில்லை; மஹான் முஹம்மத் நபி (ஸல்) அவர்களுடைய ஜீவித முறை என்னும் உஸ்வயே ஹஸனாவை, தன் வாழ்க்கைக்கோர் அரிய நமூனாவாக ஏற்று நடந்து கொள்வார்களாயின் அது ஒன்றே போதுமானதாகும்.

இக்காரணங்களினால் தான் தீனே முஹம்மதீ என்னும் இஸ்லாம் மார்க்கம், மற்றெல்லா ஹிந்து, கிறிஸ்துவ, பாரசீக, புத்த, ஜைன, ஆரிய, திராவிட மதங்களை விட மிகமிகச் சிரேஷ்டமான தூய பரிபூரண சன்மார்க்கமாகும் என்று திரிகாலமும் நம்மால் வற்புறுத்தி சொல்லப்பட்டு வருகிறது. ஆண்டவனுடைய மார்க்கங்கள் என்று வேறு சில மதங்களுக்குப் பூர்வீகப் பெயர் இருந்த போதிலும், இஸ்லாம் மதம் இறுதியாக அருளப்பட்ட தூய சன்மார்க்கமாதலின்

இதுவே இயற்கைக்கும் செயற்கைக்கும் பொருத்தமான பரிபூரண தர்மமாகும்.

இதர மதங்களிலும் மதாசார்யர் என்னும் போதகர்களும், தூதர்களும் தீர்க்கதரிசிகளும், தலைவர்களும் தோன்றி யிருக்கிறார்கள். ஆனால், அந்த மதாசார்யத் தலைவர்களாகிய மஹாத்மாக்களின் உலக ஜீவிய வாழ்க்கை முறையானது, மற்றைய சாமான்ய ஜனங்கள் பின்பற்றி நடந்து ஒழுக முடியாத விதத்தில் சிக்கலானதாகவும் சிரம சாத்தியமானவையாகவும் இயற்கைக்கும் செயற்கைக்கும் ஒவ்வாததாகவும் அமைந்து கிடப்பதால், அது பரிபூர்ணமாய் உள்ளாவுள்ளபடி எடுத்து அனுஷ்டிக்க முடியாத தாகிவிட்டது.

ஆனால், தீனுல் இஸ்லாத்தின் சீர்பெறும் தூய போதகரான எமது நபிகள் நாயகம் முஹம்மது ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுடைய ஜீவிய வாழ்க்கை முறையும் போதனையும், எப்படி இயற்கைக்கும் செயற்கைக்கும் உலக வாழ்க்கைக்கும் அனுபவ ரீதிக்கும் மிக மிகப் பொருந்தியதாய் இருந்து வருகிற தென்பதை பகற்காலச் சூரிய ஒளிபோல் விளக்கமுறக் காணலாம். நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுடைய ஜீவிய வாழ்க்கை முறை, எல்லா மனித சமூகத்துக்கும், எல்லா தேசத்துக்கும், எல்லா காலத்துக்கும் மிகப் பொருத்தமானதாய் இருந்து வந்தது. உதாரணமாக :—

(1) முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் ஏழைக் குடும்பத்திலேயே, ஆனால் உயர் குண ஒழுக்கமுள்ள குறைஷ் குலத்தில், உத்தம தாய் தந்தைக்குப் பிறந்தார்கள். உலகத்து மற்ற குழந்தைகளைப் போலவே, சிரித்து மகிழ்ந்து விளையாடி வளர்ந்தார்கள். சிறு வயதிலேயே பெற்றோரை இழந்து எத்தீம் (அனாதை) யாகி, வறுமையிலேயே வாழ்ந்தார்கள்.

(2) நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், சிறு பிராயத்திலும் சரி, வாலிபப் பருவம் அடைந்த போதும் சரி, பிற ஜனங்களோடு பழகி, பிறரைப்போல் வாழந்து, பிறருக்கு உதவி உபகாரம் புரிந்து வந்தார்கள். உலகத்தை வெறுத்து பாதிரிகளைப் போலும், சன்னியாசிகளைப் போலும், துறவிகளைப் போலும் பொறுப்பிழந்து பேதையாய் வாழவில்லை. தம் சிறிய தகப்பனாரோடு சேர்ந்து வியாபாரம் செய்யலானார்கள். பிற தேசம் போய் பொருளீட்டியும் வந்தார்கள்.

(3) நபிகள் பெருமானர் (ஸல்) அவர்கள் நல்ல யௌவன ராகிய வாலிப வயதுடையவரான போது, கதீஜா என்னும் பணக்காரப் பெண்மணியுடைய காரியஸ்தராக உத்தியோகம் ஏற்று, வியாபார ஏஜண்டாகி, சரக்குகளை வெளியூர் கொண்டு போய் நல்ல லாபத்துக்கு விற்று, சரியானபடி கணக்கு வைத்து தன் எஜமானியிடம் கொண்டு வந்து ஒப்படைத்து நாணயஸ்தர்-நம்பிக்கையான ஏஜண்ட் என்ற பெயர் பெற்றூர்கள். அதன் பொருட்டால், எஜமானியும் ஏஜெண்டும் மனமுவந்து இஷ்டபூர்வமாய் கலியாணமும் செய்து கொண்டு குடும்பஸ்தராகி, மக்களைப் பெற்று இல்லற தர்மத்தையும் செவ்வனே நடத்தினர்கள்.

(4) நபிகள் பெருமானர் (ஸல்) முதலில் உலக வழக்கப் பிரகாரம் இல்லற தர்மம் நடத்தி குடும்பஸ்தர்களுக்கு வழிகாட்டியாய் விளங்கியபின், இத்தரணியில் ஏக தெய்வ அல்லாஹ்வின் தியானத் தையும் சன்மார்க்கத்தையும் நிலை நாட்ட வேண்டு மென்று ஹிரா குகையில் போய் பல நாள் தவத்தில் அமர்ந்து, இறைவனின் அருள் பெற்று, வஹீ என்னும் ஞான வெளிப்பாட்டுக் கட்டளைகளாகிய திருக்குர்ஆனை அடைந்து, உலக ஜனங்களுக்கெல்லாம் தீனுல் இஸ்லாமைப் போதித்தார்கள். இதன் பயனுய் மக்கா வாசிகளான காபிர்களிடம் பல துன்பங்களுக்கும் தொல்லைகளுக்கும் ஆளாகி, ஊரை விட்டு ஓடி ஹிஜ்ரத்து செய்து, மதீனுவில் குடியேறி, இஸ்லாமிய வளர்ச்சிக்குப் பாடுபட்டு இறுதிவரை உழைத்தார்கள்.

(5) மதீனு வாழ்க்கையில் நபிகள் நாயகம் முஹம்மத் (ஸல்) அவர்கள், இஸ்லாமிய தர்ம ஆட்சியை நிலை நிறுத்துவதற்காக தர்ம யுத்தங்களும் புரியவேண்டிய தாயிற்று. மதத்தலைவர் என்றூல் வெறும் உபதேசம் செய்து கொண்டு, மகாத்மாவாகவும், பீடாதிபதி யாகவும், குரு சிரேஷ்டராகவும், சாது சன்யாஸியாகவும் இருந்து விடுவது மட்டுமல்ல; சமயம் வரும்போது, வாளேந்திப் போர்க் களத்துக்குப் போய், எதிரிகளோடு போரிட்டு தர்மத்தை காப்பாற்ற வேண்டும் என்ற உயர்தரப் படிப்பினையை, எமது லோக தயாளர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வுலகத்தாருக்கு கற்பித்துத் தந்தார்கள்.

(6) நபிகள் பெருமானர் (ஸல்) அவர்கள், தம் ஜீவிய காலத்திலேயே இலக்ஷிய சீலராய் வெற்றி பெற்றுத் திருப்தி

யடைந்தார்கள். மதீனாவில் குடியேறிய 10-வருஷத்துக்குள்ளேயே மக்கா நகர் பிரதேசங்களை இஸ்லாத்தின் பெயரால் பிடித்து, அங்கு மல்கிக் கிடந்த விக்ரஹங்களை யெல்லாம் ஒழித்து, அந்தக் கோயிலை மஸ்ஜிதாக அதாவது கஃபத்துல்லாஹ்வாக, ஏகத்தெய்வத்தின் தனிப் பெரும் இல்லமாக மாற்றித் திகழ்ந்தார்கள். அதுமட்டுமல்ல; சுற்றுப்புற தேசங்களிலுள்ள மன்னர்களுடைய சமுகங்களுக்கும் தூது அனுப்பி, இஸ்லாமிய சன்மார்க்கத்தை அவர்கள் ஏற்று ஒழுகும்படிச் செய்தார்கள். எனவே சொற்ப காலத்தில் அரபு தேசம் மட்டுமென்ன, பாரசீகம், எகிப்து, ரோமாபுரி, கிரேக்கநாடு, துருக்கி தேசம் எங்கும் இஸ்லாமிய ஏகதெய்வ பாங்கொலி முழங்கத் தொடங்கியது. இங்ஙனம் நபிப் பெருமானார் (ஸல்) அவர்கள் தங்கள் ஜீவியத்திலேயே வெற்றிபெற்று, மன்னர்களுக் கெல்லாம் மன்னராய், முடிசூடா வேந்தராய், மகாத்மாக்களுக் கெல்லாம் மகாத்மாவாய் விளங்கி, இறைவன் அழைப்பின் பேரில், இத்தரணி வாழ்வை நீத்து அல்லாஹ்வின் சன்னிதானம் போய்சேர்ந்தார்கள்.

முஹம்மத் நபி (ஸல்) அவர்களுடைய புனித ஜீவியகாலத்திலேயே தேசாதிபதிகளான மன்னர்க ளெல்லாரும் சிரம்பணிந்தார்கள். அப்படிப்பட்ட நபிகளுநாதர் (ஸல்) அவர்கள், மன்னர் போல் அந்தஸ்து பெற்றிருந்தும், ஒரு பரம ஏழையைப் போலவே வாழ்ந்தார்கள். ஆஸ்தியோ, பூஸ்தியோ எதையும் அவர்கள் தம் மனைவி மக்களுக்காக தேடிவைத்துப் போகவில்லை. ஆனால், உலகத்து மன்பதைகளை யெல்லாம் தன் குலமாக (உம்மத்தாக)ப் பாவித்து, அழியாச் செல்வமான தீனுல் இஸ்லாத்தை சேமித்துத் தந்தார்கள். உலகம் உள்ளளவும் இந்த அழியாச் செல்வத்துக்கு, எல்லா முஸ்லிம்களும் அனந்தரக்காரர்களாவர். இதுதான் இஸ்லாமியச் செல்வம்; இதுதான் இறைவனின் தர்மம்; இதுதான் முஹம்மதிய மார்க்கம். வாழ்க இஸ்லாம்.

சன்மார்க்க சங்கே

(கவிஞர் வேளாங்கண்ணி-சாந்திதாசன்)

படம்:—திகம்பரசாமியார் இசை:—சன்மார்க்க தியாகம்

தொகையறு

பன்னூற்றுண்டின் பாசறைச் சின்னமே
பரவிய தியாகமே
எண்ணத்தே ஊடுருவும் என்னரும் சமுகமே
எங்கணும் நின் பிரதாபமே

பல்லவி

(1) சன்மார்க்க சங்கே சாதனேக்கண்டு
சரியாய் முழங்கு
துன்மார்க்க துஷ்டர் திருந்திடவேண்டி
தொடர்ந்து முழங்கு—நீயே
நடந்து முழங்கு (சன்)

அநுபல்லவி

(2) முன்பாலேக்குறு நில மெங்கும்—பெரும்
பாதகம் கண்டாயே
பின் சோலே அதாகி பச்சிளம் பிறைக்கொடி
பறந்திட விண்டாயே (சன்)

(3) குருதியைக் குடித்த குண்டர்களிடை—ஓர்
கொள்கையை நாட்டி விட்டாய்
இறுதியாய் இன்பசுக இதநெறியை
இயங்கிடச் செய்து விட்டாய் (சன்)

(4) இன்றைக்கு மல்கிய இடுக்கண் இருளற—நேர்
எழுச்சி யுற்றிடுவாய்
பண்டையப் பெருமை பகர் சாந்திதாசன்
பா இசை எழுப்பிடுவாய் (சன்)

மிப்தாஹுஸ்ஸலாஹ்,
பீ யீலாஹின்னிகாஹ்.

(இப்புத்தகம் இல்லறவாசிகள் ஒவ்வொருவருக்கும் அவசியம் வேண்டியது)

இதில் நிக்காஹுடைய வரிசைகளும், அஹ்காம்களும், ஸ்திரி புருஷருடைய குணலக்ஷணங்களும், ஒவ்வொருவரும் இன்ன குணமுடையவர்க ளென்று பார்த்த மாத்திரத்தில் கண்டறியக் கூடிய வழியும், ஸ்திரீ புருஷர்கள் அவசியம் அறிய வேண்டிய அநேக ரகசியங்களும், ஒரு புருஷன் விரும்பிய மனைவியையும், ஒரு ஸ்திரீ விரும்பிய கணவனை யும் அடைவதற்கு வேண்டிய இஸ்முகளும் அடங்கி யிருக் கின்றன.

இவை யன்றி ஸ்திரீ புருஷருக் கிடையில் முஹப்பத் உண்டாவதற்கும் ஹமல் உண்டாவதற்கும், ஹமலைக் காப்ப தற்கும் அவசியமான இஸ்முகளும் ஹமலில் உண்டாகக் கூடிய பலவகை வியாதிகளுக்கு அரிய ஔஷதங்களும் கூறப்பட்டிருக்கின்றன.

முன் பதிப்பி லிருந்ததைவிட இப்பதிப்பில் அநேக அரிய விஷயங்களும் இஸ்முகளும் சேர்க்கப்பட்டிருக் கின்றன. வாசிப்போர்க்கே இந்நூலின் அருமை விளங்கும். புதிய பதிப்பு கிளேஸ் காகிதம் கலிகோ பைண்டு விலை ரூ. 3

கிடைக்குமிடம் :—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,
ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

இரத்தச் சின்னம்.

(தொடர் கதை 22—வது பகுதி)

40-வது அத்தியாயம்.

பிராங்கோ கத்தி குத்துப்பட்ட செய்தி, மந்திரிசபையில் பீதியை யுண்டாக்கிற்று. இரத்த சின்ன சங்கம் இனி யாரிடம் நெருங்குமென்ற விஷயம் தெரியவில்லை.

பிரதம மந்திரி இன்ஸ்பெக்டர் பென்டனை தனது பங்களா விற்கு தருவித்து, இரண்டு மணிநேரம் இருவரும் இரகசியமாக சம்பாஷித்தனர். பிரதமருடன் இன்ஸ்பெக்டரும் தனியாக பேசியது இதுதான் முதல்தடவை. அதற்குப்பின் மந்திரிசபை கூடிற்று. இக் கூட்டத்தைப்பற்றி பத்திரிக்கையில் பிரஸ்தாபிக்கப்பட்டது. அத் துடன் பிரதமரை இரத்தச் சின்ன சங்கம் பயமுறுத்தியதாக ஓர் வதந்தியும் கிளம்பிற்று. இவ்வதந்தியை கவர்ன்மென்ட் ஒத்துக் கொள்ளவுமில்லை. மறுக்கவுமில்லை.

அன்றிரவு ஸிம்ஸன் தனது இருப்பிடத்திற்கு வர, அங்கு இன்ஸ்பெக்டர் பென்டன், இவர் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

"என்ன விஷயம்" என்று ஸிம்ஸன் அவசரமாகக் கேட்டார்.

"உங்களின் உதவி தேவை" என்று இன்ஸ்பெக்டர் சொல்லிக் கொண்டே, ஸிம்ஸனுடன் விட்டினுள் நுழைந்து நாற்காலியில் உட்கார்ந்தபின் "நான் வேலையை விடப்போகும் விஷயம் உங்களுக்கு முன்பே தெரியும். தற்போது பிரதமர் என்னை சீக்கிரம் வேலையி னின்றும் நீங்கினல் நலமென்று தெரிவிக்கிறார். மந்திரிசபையி லிருந்து ஒரு கமிட்டி தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அவர்கள் நாம் இந்த இரத்த சின்ன சங்கத்தைப் பிடிக்க என்னென்ன செய்தோ மென்பதை விபரிக்கச் சொல்கிறார்கள். நாளை மாலை பிரதமர் வீட்டில் ஒரு மந்திரி கூட்டம் கூடுமாம். நான் அந்த கூட்டத்திற்கு போக வேண்டுமாம்."

"எதற்கு?"

"நான் இதுவரை என்னென்ன செய்தே னென்பதைப் பற்றி ஒரு சிறிய பிரசங்கம் செய்யவேண்டுமாம். வெள்ளிக்கிழமை மாலை

எனக்குத் தெரிந்ததை சொல்லப் போகிறேன். அதற்கு உமது உதவி தேவை"

"எனது உதவிக் கேட்க வேண்டியதேயில்லை. அது எப்பொழுதும் உண்டு"

"இந்த இரத்த சின்ன சங்கத்தைப்பற்றி இன்னும் அநேக விஷயங்கள் எனக்கு மர்மமாகவே யிருக்கிறது. ஒவ்வொரு விஷயத்தையும் நன்றாக கவனித்து வருகிறேன். தற்போது எனது அபிப்பிராயம், நமது போலீஸிலேயே யாரோ ஒருவன் இரத்தச் சின்ன சங்கத்தில் சேர்ந்தவனாக யிருக்கலாம்."

"எனது அபிப்பிராயமும் அதே. நீங்கள் எதைக்கொண்டு இதை சொல்கிறீர்கள்?"

"ஒரு விஷயம் தெரிவிக்கிறேன். டாம், அவனது தகப்பனாரின் பெட்டியிலிருந்து ஒரு போட்டோவைக் கண்டு பிடித்து எனக்கு போஸ்ட் மூலம் அனுப்பினான். அது எனக்குச் சேர்ந்தது. மேலே போடப்பட்ட ஸீலும் ஒழுங்காக யிருந்தது. உடைத்துப் பார்க்க உள்ளே வெறும் கார்டு ஒன்றிருந்தது. பிறகு விசாரித்ததில் டாம் அந்த போட்டோவை குலோரியாவசம் கொடுத்ததாகவும், அவள் அதை போஸ்ட் பெட்டியில் போட டாம் பார்த்ததாகவும் சொல்கிறான். அதனால் அந்த கவர் இங்கு வந்தபின் உள்ளுள்ள போட்டோவை எடுத்து, வெறும் கார்டு வைக்கப்பட்டிருக்கிறது."

"அது என்ன போட்டோ?"

"ஏதோ ட்ரம்மன்ட் என்பவனின் கழுத்தை வெட்டும் போட்டோவாக யிருக்கலா மென்று எண்ணுகிறேன். பின் ட்ரம்மன்ட் தப்பித்துக்கொண்டானே! டாமின் தகப்பனார் பெர்ரி இறப்பதற்கு முந்தியநாள் அவருக்கு கிடைத்ததாம். அதை டாம் பார்த்து எனக்கு அனுப்பினான்."

"குலோரியா போஸ்டில் போட்டாளா? போலீஸில் ஊழல் இருப்பதை மறந்து விடுங்கள். இந்த பெண்ணைப் பற்றிதான் எனக்கு மகா சந்தேகம். இன்று அவள் வீட்டை சோதனை செய்தேன்" என்று ஸிம்ஸன் சொல்லி, மறு அறைக்குப்போய், ஒரு சிறிய பார்சலை எடுத்துவந்து "இது அவள் வீட்டிலிருந்தது" என்று அந்த பார்ஸலை உடைத்து காண்பித்தார். அதினுள் கைஉறை (குளவ்ஸ்) ஒன்றும் ஒரு கூர்மையான கத்தியுமிருந்தது. "கிரீன் வீட்டில் பார்த்த கையுறையைப் போலிருக்கிறது. இது மற்றொரு கைஉறையாயிருக்கலாம். இந்த கத்தியும் அங்கு பார்த்த கத்தியைப் போலவே யிருக்கிறது" என்றார் ஸிம்ஸன்.

இன்ஸ்பெக்டர் பென்டன் அதைக்கூர்ந்து கவனித்தபின் "ஆம். இது இடதுகைக்கு அணியக்கூடியது. கிரீன் வீட்டில் பார்த்தது வலதுகைஉறை. இதன் சொந்தக்காரன் யாராகயிருக்கலாம். உங்களது அபூர்வ சக்தியைக் கொண்டு சொல்லுங்கள் பார்க்கலாம்" என்று கேட்டார்.

"நானும் கண்டுபிடிக்க முயற்சித்தேன். இது அநேக கைகள் மாறியிருப்பதால் கண்டுபிடிக்க முடியவில்லை. இருந்தாலும் இவை குலோரியா வீட்டிலிருந்ததால், அவள் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறாளென்று நன்றாகத் தெரிகிறது." என்று சொல்லி கையுறையையும் கத்தியையும் மறுபடி பார்சலில் வைத்துகட்டி "நீங்கள் எனது உதவி என்கிறீர்களே என்னால் இயன்றதை செய்ய தயார்" என்றார்.

"இந்த கேஸ் விஷயமாக எனக்கு ஏற்படும் சந்தேகங்களை நீங்கள் நிவர்த்தி செய்யவேண்டியது. எனது தாயார் இங்கிருந்தால் எவ்வளவு சௌகரியமாக யிருக்கும்."

"தாயாரா ?" என்று ஆச்சரியத்துடன் ஸிம்ஸன் கேட்டார்.

"எனது பாட்டி!—உங்களையும் என்னையும் தவிர, இன்னொரு பெரிய துப்பறிபவர்" என்றார்.

ஸிம்ஸனுக்கு அப்பொழுதுதான், இன்ஸ்பெக்டரும் சில சமயத்தில் வேடிக்கையாக பேசுவாரென்று அறிந்தார்.

எங்கும் ஜனங்கள் இரத்த சின்ன சங்கத்தைப்பற்றியே பேசிக் கொண்டிருந்தனர். ஸிம்ஸன் காலையில் எழுந்ததும் பத்திரிகையை எடுத்துப் பார்க்க, கொட்டை எழுத்துகளில் "குலோரியா தப்பி ஓடிவிட்டாள்" என்று போடப்பட்டதைப் பார்த்தார். சாதாரணமாக ஜெயிலிலிருந்து தப்பி ஓடும் விஷயம் நாவல்களில் புத்தகவாயலாக படிக்கக்கூடும். ஆனால் பால்டிக் ஜெயிலிலிருந்து ஒரு பெண் உண்மையாக தப்பி ஓடிவிட்டாளென்றால் இதுவரை நடைபெறாத விஷயம். ஜெயிலில் காலையில் குலோரியா யிருந்த அறையைத் திறந்து பார்க்க, அவளைக் காணோம். ஸிம்ஸன் இச் செய்தியைப் படித்ததும் கலங்கினர். திகில்பிடித்துக்கொண்டது. உடம்பு முழுவதும் நடுங்கியது. பத்திரிகையை ஒன்றுக்கு இருமுறை ஒரு வார்த்தை விடாமல் மெதுவாக கவனித்து படித்தார். தப்பித்த மர்மம் விளங்கவில்லை. இருந்தாலும் பத்திரிகையிலோ விபரமாகப் போடப்பட்டிருக்கிறது:—"இந்த கைதி இரத்த சின்ன சங்கத்தை சேர்ந்தவளென்று நினைத்ததாலும், பெரிய கொலை காரியங்களில் ஈடுபட்டிருக்கக்கூடுமென்று கருதி, மற்ற கைதிகளைவிட இவளுக்கு இரண்டத்தனை காவல் ஏற்படுத்தப்பட்டது. கைதிகளுள்ள அறையை இரவில் ஒரு மணிநேரத்திற்கு ஒரு முறை பார்த்துவரும்

வழமையை தற்போது அரைமணி நேரமாக்கப்பட்டது. இருந்தாலும் ஒவ்வொரு அறையினுள்ளும் அச்சமயம் கைதியைக் கவனிப்பதில்லை. அறையின் கதவைத்தான் பார்ப்பது வழமை. அப்படியிருந்தும் இரவு 3 மணிக்கு காவல்காரி குலோரியா அறையினுள், கதவின் துவாரத்தின் வழியாக பார்த்தாளாம். அப்பொழுது குலோரியா யிருந்தாளாம். காலை 6-மணிக்கு கதவைத் திறந்துபார்க்க குலோரியாவைக் காணோம். கதவு ஒழுங்காக பூட்டப்பட்டேயிருந்தது. ஜன்னல் கம்பிகளும் வளைக்கப்படாமல் ஒழுங்காக யிருந்தன.”

“ஜெயிலின் வெளியில் எங்காவது காலடி தெரிகிறதா வென்று கவனிக்க பிரயோஜனப்படவில்லை. அறையிலிருந்து வெளிவர 6 வாயல்களைக் கடக்கவேண்டியது. எந்த வாயல் வழியாகவும் வரவில்லை.”

“இவ்வாறு பாதுகாப்பினின்றும் தப்பிக்க வைத்த இரத்த சின்ன சங்கத்தின் சாமார்த்தியம் மெச்சத் தகுந்தது. இவ்விஷயம் நமது மந்திரிகளின் உயிர்களை மிறட்டும் சமயத்தில் நடந்ததும் கவனிக்கத்தக்கது”

இவைகளைப் படித்ததும் ஸிம்ஸன் மணியைப் பார்த்தார். 11½. உடனே எழுந்தார். உடைகளை மாட்டிக்கொண்டு சாப்பிடாமல் போலீஸ் தலைமை ஆபீஸுக்கு ஓடினார். அங்கு பென்டன் சந்தோஷமாக சிரித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார்.

“பென்டன்! இவ்விஷயம் நம்பவேமுடியவில்லை. ஜெயிலில் அவளுக்கு சிநேகிதர்கள் யிருக்கக்கூடும்” என்றார்.

“எனது எண்ணமும் அதே. நீங்கள் சொல்வதையே, கமிஷனரிடம் நானும் சொன்னேன். அவளுக்கு அங்கு சிநேகிதர்கள் இல்லாவிட்டால் தப்பிக்க முடியவே முடியாதென்றேன்” என்று பென்டன் சொன்னார்.

இவ்விஷயத்தை கவலையுடன் பேசுவதற்கு பதில், இன்ஸ்பெக்டர் சந்தோஷமாக சொல்வதைக் கவனித்த ஸிம்ஸனுக்கு இன்ஸ்பெக்டரின் பேரில் சந்தேகமேற்பட்டது.

41-வது அத்தியாயம்.

ஸிம்ஸனுக்கு பத்திரிகையில் படித்த விஷயத்தைவிட அதிகமாக ஒன்றும் அறியமுடியவில்லை. ஒரு டாக்ஸி காரில் தனது ஆபீஸுக்கு ஓடினார்.

குலோரியா தப்பித்த விஷயம் மிக முக்கியமானது. ஸிம்ஸன் “பென்டனாக யிருக்கக்கூடுமா” என்று யோசித்தார். “சீ! பெரிய முட்டாள்! அவராகயிருக்காது” என்று தனக்குள்ளேயே சொல்லிக்

கொண்டார். இருந்தாலும் பென்டனின் கடத்தையை ஒவ்வொன்ருக முதலிலிருந்து எண்ணினர்.

"இருக்காது" என்று சொல்லிக்கொண்டே தனது ஆபீஸுக்கு போனர். அங்கு முதலில் கவனித்தது: தனது கடிதப் பெட்டியில் ஒரு கடிதத்தையும் காணேம். அந்த தபால் பெட்டி நூதனமாக அமைத்திருந்தார். ஒரு கடிதத்தை அதனுள் போட்டதும் உடனே அது அந்த பெட்டியின் கீழே விழுந்துவிடும். பிறகு அதை எடுக்க முடியாது. நடுவில் அலுமினிய தகடுகள் கத்தியைப்போல் யிருக்கும். அதனுல் கையை உள் நுழைக்க முடியாது. அப்படிப்பட்ட பெட்டியில் ஒருகடிதமுமில்லாதது ஆச்சரியமாக யிருந்தது. அறையினுள் சென்ருர். மேஜையின் எல்லா டிராயர்களும் திறக்கப்பட்டிருந்தன. சுவற்றில் ஒரு இரும்புப்பெட்டி, முன் மரப்பலகையால் மறைக்கப்பட்டிருந்தது. அந்த இரும்பு பெட்டியும் திறக்கப்பட்டிருந்தது. தனது மேஜையின் கீழே ஒரு இரகசிய பெட்டி வைத்திருந்தார். அதினுள் இரத்த சின்ன சங்கத்தைப் பற்றி காகிதங்கள் வைத்திருந்தார். அதையும் காணேம். உளியால் பெயர்த்து எடுக்கப்பட்டிருந்தது. இவைகளைப் பார்த்த ஸிம்ஸன் அப்படியே நாற்காலியில் உட்கார்ந்து விட்டார். "யார் இந்த வேலை செய்திருக்கக்கூடும்?" என்று யோசித்தார். ஒரே ஆளின்பேரில்தான் சந்தேகப்பட்டார். பிறகு வெளியே வந்து லிப்டில் வேலைசெய்யும் சிறுவனிடம் விசாரிக்க சந்தேகம் ஊர்ஜிதப்பட்டது. "ஆம். ஸார். உங்களிடம் வேலைப் பார்த்து வந்த பெண் இன்று காலை வந்தாள். சுமார் ஒரு மணிநேரம் யிருந்தாள். பிறகு போய்விட்டாள்" என்று அந்த சிறுவன் தெரிவித்தான்.

"கையில் ஏதும் கொண்டுபோனுளா?"

"ஆம். ஒரு சிறிய பை" என்று பதிலுரைத்தான். பிறகு ஸிம்ஸன் போலீஸ் தலைமை ஆபீஸுக்கு பென்டனிடம் சொல்ல சென்ருர்.

"மிஸ்டர் பென்டன்! நான் தற்போது உங்களிடம் ஒரு விஷயம் சொல்லப் பிரியப்படுகிறேன். இவ்விஷயம் இதுவரை யாருக்கும் சொல்லவில்லை. நமது கமிஷ்னருக்கும் இதுவரை தெரியப் படுத்தவில்லை. நாம் இதுவரை இந்த இரத்த சின்ன சங்கம் ஒருவனுல் நடத்தப்பட்டு வருவதாக கருதிவந்தோம். தற்போது நான் அறிவதாவது:—இந்த பெண் அக்கூட்டத்தில் சேர்ந்தவளே; இருந்தாலும் காரில் ஒரு மர்ம மனிதன் அங்காங்கு வந்து அங்கத்தினர்களுக்கு உத்திரவிடுகிருனே, அவனும் இவள் சொல்படி நடப்பதாகத் தெரிகிறது. இவளே இந்த குலோரியாவே அந்த சங்கத்தின் தலைவி"

"அப்படியா?" என்று அதிசயத்துடன் பென்டன் வினவினர்

"அதுவுமல்லாமல் அவளை நான் ஏன் வேலையில் வைத்திருந்தேன் என்று கேட்கக்கூடும். அவள் மூலமாக சங்கத்தை நெருங்கலாமென்று எண்ணினேன் என்பதை உங்களுக்கு முன்பே தெரிவித்துள்ளேன். அந்த எண்ணமே சரி."

"அப்படியாயின் ஏன் அவளை வேலையினின்றும் நீக்கிவிட்டீர்கள்?"

"ஏனென்றால் அவள் செய்த குற்றத்திற்கு அவளை அச்சமயம் நீக்குவதே உத்தமமாக தோன்றியது. அச்சமயம் அவளை நீக்காவிடில், அவள் சந்தேகப்பட்டு நமது நோக்கத்தை அறியக்கூடும். அதுவுமல்லாமல் அவள் இன்று காலை செய்த வேலையினின்று எனது நோக்கத்தை அறிந்திருப்பாள். இன்று நீங்கள் பிரதமர் கூட்டத்தில் பிரசங்கம் செய்தபின், உங்களுக்கு நான் ஒரு சிறிய கதை சொல்லப்போகிறேன். அதைக் கேட்டு ஆச்சரியப்படுவீர்கள்"

"அது என்ன கதையாயிருந்தாலும் நான் ஆச்சரியப்படமாட்டேன்" என்று பென்டன் பதில் சொன்னர்.

ஸிம்ஸனுக்கு அன்று காலை எழுந்ததிலிருந்து இரண்டு அதிர்ச்சிகள் ஏற்பட்டு விட்டன. முதலாவது பத்திரிகையைப் பார்த்ததும் ஏற்பட்டது. இரண்டாவது தனது ஆபீஸில் திருடு போனது. அவர் தற்போது தனது வீட்டிற்குத் திரும்பியதும் மூன்ருவது அதிர்ச்சி ஏற்பட்டது. வீட்டில் வேலைக்காரியைக் காணேம். ஒரே ஒரு வேலைக்காரியை ஸிம்ஸன் அமர்த்தியிருந்தார். அவள் இரவில் இங்கு தங்காவிடினும் இரவு 9 மணிவரை இருக்க வேண்டுமென்று ஸிம்ஸன் சொல்லி யிருக்கிருர். தற்போது மணி 6 தான்; வீட்டிலோ விளக்கு எரியக்காணேம்.

இவர் உடனே விளக்கை ஏற்றி, சுற்றிப்பார்த்தார். முன் அறை பூராவும் சோதிக்கப்பட்டதாகத் தெரிந்தது. வேலைக்காரி இல்லாததற்கு காரணத்தை யறிந்தார். தான் வெளியே போயிருக்கும்போது குலோரியா வந்திருக்கக்கூடுமென்றும் அவளே வேலைக்காரியை வீட்டினின்றும் வெளியே அனுப்ப ஏதாவது வழி செய்திருக்கக்கூடுமென்றும் தீர்மானத்திற்கு வந்தார்:

"பெரிய கெட்டிக்காரி!" என்று அவள் திறமையை மெச்சினர். தன்னைவிட மிக யோசனையுடன் வேலைசெய்து வருகிருள். 12 மணி நேரத்திற்குள், ஜெயிலை விட்டு வெளிவந்து ஆபீஸையும் வீட்டையும் சோதித்திருக்கிருள். அதுவுமல்லாமல் இரத்த சின்ன சங்கத்தைப்பற்றிய விஷயங்களுள்ள காயிதங்களை எடுத்துச் சென்றிருக்கிருள்.

ஸிம்ஸன் தனது உடைகளை மாற்றிக்கொண்டே, "இனி என்ன செய்வாள்?" என்று யோசனை செய்தார். பிறகு தானென்னென்ன அன்று செய்யவேண்டு மென்று எண்ணியபின், தனக்குத்தானே "இன்றோடு பென்டனின் வேலை போய்விடும்" என்று சொல்லிக் கொண்டே, தனது மேஜை அறையைத் திறந்து ஒரு கைத்துப்பாக்கியை எடுத்து ரவைகள் ஒழுங்காக உண்டாவென்று சோதித்துப் பார்த்தபின், அதை தனது ஜேபியில் வைத்துக்கொண்டார். பிறகு பிரதமர் வீட்டுக்குச் சென்றார். அங்கு வராண்டாவில் டாம் நிற்பதைப் பார்த்தார்.

"மிஸ்டர் ஸிம்ஸன்! என்னை இங்கு பார்க்க ஆச்சரியமாக யிருக்கிறதா? உங்களை விட எனக்கே மிக ஆச்சரியம். எதற்காக இங்கு என்னை வரவழைத்தார்களோ!" என்றான் டாம்.

"பிரதமரின் காரியதரிசிதான் என்னை வரவழைத்தது. இருந்தாலும் பென்டனின் வேண்டுகோளின் பேரில் நடந்திருக்கலாம்" என்றான். அச்சமயம் பிரதமரின் காரியதரிசி வந்து இருவரையும் உள்ளே அழைத்துச் சென்றான். அங்கு சுமார் 12 மந்திரிகள் இரண்டு வரிசையாக உட்கார்ந்திருந்தனர். பிரதமர் ஸிம்ஸனிடம் வந்து "இன்ஸ்பெக்டர் பென்டன் இன்னும் வரவில்லை" என்று சொல்லி, பக்கத்தில் நின்ற டாமைப் பார்த்து "நீ பெர்ரியின் மகனல்லவா? உன்னை கட்டாயம் வரவழைக்குமாறு இன்ஸ்பெக்டர் சொன்னார். உனது தகப்பனார் எவ்வாறு கொலையுண்டா ரென்பதைப் பற்றி எதும் சொல்லவோ, என்னமோ—உனது தகப்பனார் பெர்ரி, எனக்கு நன்றாகத் தெரியும்—எனது சிநேகிதர்" என்றார்.

அச்சமயம் இன்ஸ்பெக்டர் பென்டன் ஒரு பழைய கோட்டை அணிந்து கொண்டு வந்தார். பார்ப்பதற்கே ஒரு முட்டாளைப்போல் தோன்றினர். அவருக்கு பின்னால் கமிஷனர் வந்து, பிரதமரிடம் இரகசிய ஒன்றிரண்டு வார்த்தைகள் பேசினர். பிறகு கமிஷனர் ஸிம்ஸனும் டாமும் நிற்குமிடம் வந்து நின்றார். ஸிம்ஸனைப் பார்த்து "பென்டன் என்ன பேசப்போகிறா ரென்று உங்களுக்கு தெரியுமா? நான், பிரதம மந்திரி வேண்டுகோளின் பேரில் பென்டன் பேசப் போகிறா ரென்று நினைத்தேன். பென்டனே ஒரு பிரசங்கம் செய்ய உத்திரவு கேட்டாராம். என்ன உளரப்போகிறாரோ?" என்று கவலையுடன் கமிஷனர் சொன்னார்.

"முட்டாளைப் போல் உள்றுவாரென்று நான் நினைக்க வில்லை" என்று டாம் சொன்னான். கமிஷனர் அவனை உற்று நோக்கினர். ஸிம்ஸன் அப்பொழுது டாமை கமிஷனருக்கு அறிமுகப் படுத்தி, "டாம் சொல்வது சரியாக யிருக்கலாம். இரத்தச் சின்ன சங்கத்தைப் பற்றி இதுவரை வெளிவராத விஷயங்களை தெரிவிக்கக் கூடும்.

அவருக்கும் சந்தேகம் ஏற்படக் கூடிய விஷயங்களை நான் சொல்ல முயற்சிப்பேன்'' என்றார்.

எல்லாரும் உட்கார்ந்தனர். பிரதமர் பென்டனை முன்னால் அழைத்தார். "உங்களுக்கு ஆக்ஷேபனை யில்லாவிடில் நான் இங்கேயே நின்று பேசுகிறேன். எனக்கு பிரசங்கம் செய்து பழக்க மில்லை. ஒருவருடன் என் மனதிலுள்ளதை சொல்வது போல் சொல்கிறேன்'' என்று சொல்லி ஒரு முறை கனைத்து, பேச தொடங்கினார். முதலில் தயங்கி தயங்கி பேசினார். பிறகு ஒழுங் காக பேசத் தொடங்கினார்.

"இரத்த சின்ன சங்கத்தின் தலைவன் ட்ரம்மண்ட் என்ற பெயரை யுடையவன் — கொலைப்பாதகன் — பிரான்ஸில் அநேக கொலைகள் செய்து, பின்பு அகப்பட்டு, தலையை வெட்ட உத்திரவா யிற்று. ஆனால் தலையை வெட்டும் மெஷினில் வேலை செய்பவர் களின் அஜாக்கிரதையால் தலை வெட்டப்பட வில்லை. அப்பொழுது அவனது வயது 23 வருடமும் 4 மாதமும் ஆயிற்று. அவனை ஜெயிலில் போடப்பட்டது. ஜெயில் அதிகாரியை கொலை செய்து, அங்கிருந்து தப்பி ஆஸ்ட்ரேலியாவுக்கு ஓடிவிட்டதாகத் தெரிய வந்தது. அவனைப்போல் ஒருவன் வேறு பெயருடன் மெல்பர்ன் என்னும் ஊரில் ஒரு கடையில் வேலை பார்த்து வந்தான். அங்கு 18 மாதம் வேலை பார்த்த பின் இன்னொருவனிடம் 2 வருடமும் 5 மாதமும் வேலை பார்த்தான். அந்த எஜமானரை ஏமாற்றியதாக தெரிந்து, எஜமானர் போலீஸுக்கு பிராது செய்யவே, ஆஸ்ட் ரேலியாவை விட்டு ஓடி விட்டான்."

"அதற்குப் பின் அவன் எங்குச் சென்றான் என்பதை கண்டு பிடிக்க முடிய வில்லை. பிறகு இங்கு ஒருவன் இரத்தச் சின்ன சங்கம் என்னும் பெயரால் அநேக அங்கத்தினர்களைச் சேர்த்தான். ஒரு அங்கத்தினருக்கு மற்ற அங்கத்தினரைப் பற்றித் தெரியாது. முக்கியமான பதவியிலுள்ளவர்களுள், பணம் மிக தேவை படுபவர்க ளாகவும் அல்லது ஏதாவது இரகசியமாக குற்றம் செய்து, அக்குற்றம் வெளிக்குவராமலும் போலீசுக்கு தெரியாமலும் இருப்பவர்களாகவும் தேர்ந்தெடுத்து, அவர்களைப் பற்றிய முழு விபரம் இரகசியமாக விசா ரித்தபின் அவர்களை காரில்போய் சந்திப்பது இந்த தலைவனது வழமை. ஜன நடமாட்டமில்லாமலும், விளக்கு வெளிச்சம் குறைவா கவு முள்ள இடங்களிலேயே இந்த சந்திப்பு ஏற்படும். அவர்களின் நிலைமையை விபரித்து, அவர்களின் குற்றங்களை பகிரங்கப் படுத்துவதாக சொல்லி பயமுறுத்தி, அவர்களை அங்கத்தினர்களாக சேர்த்து, தனக்கு வேண்டிய வேலைகளை அவர்களின் மூலம் செய்து வருகிறான். இவ்வாறே முன்பே ஒரு கொலை செய்த

சார்லியை தனது கைக்குட்படுத்திக் கொண்டான். இவ்வாறே திருட்டு வேலையில் ஈடுபட்டிருந்த குலோரியாவையும் பாங்கின் சொந்தக்காரரான மாரீஸையும் அங்கத்தினர்களாக சேர்த்தான். ஹூட்டன் பாரீஸில் தன்னுடன் சேர்ந்து கொலை களவுகளில் ஈடுபட்ட ட்ரம்மண்டை இங்கு பார்த்து விடவே அவன் கொலை செய்யப் பட்டான். ஆனால் கொலை செய்வதற்கு முன், இந்த தலைவன் மிக முன் ஏற்பாட்டுடன் நன்றாக யோசித்தே செய்து வந்தான். இந்த இரத்தச் சின்ன சங்கம் என்று பென்டன் பேசும் போது, "ஏன் இரத்தச் சின்ன சங்கம் என்ற பெயர் வைக்கப்படடது?" என்று ஸிம்ஸன் கேட்டார்.

"ஏனென்றால், அவனுடைய சிநேகிதர்கள் அவனை இரத்த சின்னம் என்று கூப்பிடுவது வழமை. அவனுடைய கழுத்தில் ஒரு சிகப்பு வட்டம் இருந்ததாம். அசைந்தால் கொன்று விடுவேன் உஷார்" என்று பென்டன் தனது துப்பாக்கியை ஸிம்ஸன் முன் நீட்டினார். "கையைத்தூக்கு" என்று சொல்லி, ஸிம்ஸனின் அருகே நெருங்கி கழுத்தில் ஷர்ட் பட்டனை எடுத்து நீக்கினார். எல்லோரும் ஆச்சரியமும் திகிலுமடைந்தவர்களாக கூர்ந்து கவனித்தனர். ஸிம்ஸனின் கழுத்தில் இரத்த கலரில் ஒரு சிகப்பு வட்டம் இருந்தது.

42–வது அத்தியாயம்.

அதே சமயத்தில் பென்டனின் முன் ஏற்பாட்டின்படி மூன்று போலீஸ் ஆட்கள் உள் நுழைந்தனர். ஒருவன் ஸிம்ஸனின் கையில் விலங்கிட்டான். ஒருவன் ஸிம்ஸனின் ஜேபியிலிருந்த கைத்துப்பாக் கியை எடுத்தான். மற்றவன் ஒரு துணிப்பையால் ஸிம்ஸனின் முகத்தை தலையுடன் மூடி கட்டினான். உடனே ஜெயிலுக்கும் கொண்டு போகப் பட்டான்.

இன்ஸ்பெக்டர் பென்டன் தனது நெற்றியிலிருந்த வியர்வையை துடைத்து, மந்திரிகளைப் பார்த்து "எனது பிரசங்கத்தின் மீதத்தை நாளை சொல்ல எனக்கு அனுமதியளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்" என்றார். உடனே எல்லோரும் அவரைச் சூழ்ந்து ஏதேதோ கேள்விகள் கேட்க ஆரம்பித்தனர். அவர் எதற்கும் பதில் சொல்லவில்லை. அப்போது கமிஷ்னர் "பாவம்! இன்ஸ்பெக்டர் அதிக கஷ்டப்பட்டார். எவ்வளவு கஷ்டப்பட்டா ரென்று எனக்கு நன்றாகத் தெரியும். அதனால்" பிரதமரைப் பார்த்து "இன்று அவரை விட்டு விடுங்கள். நாளை மீதத்தை விபரிப்பார்" என்றார்.

"நாளை இன்ஸ்பெக்டர் சாப்பாடு எங்களுடன் சாப்பிடட்டும்" என்று பிரதமர் வேண்ட "வருமாறு செய்கிறேன்" என்று கமிஷ்னர் இன்ஸ்பெக்டரின் சார்பாக ஒத்துக் கொண்டார்.

இன்ஸ்பெக்டர் டாமின் கையைப் பிடித்து கொண்டு வெளியே வந்தார். வெளியேநின்ற டாக்ஸி காரில் டாமை ஏறச்சொல்லி, தானும் உட்கார்ந்தார்.

" நான் கனவு காண்கிறேனு ! ஸிம்ஸனு ! இருக்காது. இருந்தாலும்...... " என்று டாம் சொல்ல.

" ஓ! அவன்தான் " என்று இன்ஸ்பெக்டர் சிறித்துக் கொண்டே சொன்னர்.

" அப்படியாகில் இவனும் குலோரியாவும் சேர்ந்து நடத்தினர்களா? " என்று டாம் கேட்டான்.

" ஆம் " என்றூர் இன்ஸ்பெக்டர்.

" நீங்கள் எவ்வாறு கண்டுபிடித்தீர்கள் ? "

" எனது தாயார் சொல்லைக் கொண்டு. எனது தாயார் எவ்வளவு கெட்டிக்காரி என்று இன்னும் உன்னல் அறிய முடியவில்லை. இன்று இரவுதான் சொன்னள்."

" உனது தாயார் வந்து விட்டாளா ? "

" ஆம். வந்துவிட்டாள் அவளை நீ பார்க்கவே உன்னை கூப்பிட்டேன். அவள் அடிக்கடி தர்க்கம் செய்வாள். அதனல் அவள் சொல்படியே விட்டுவிடுவது என் வழமை."

" அப்படியாகில் நானும் அவளுடன் தர்க்கம் செய்ய தயாரா இல்லை. அதிருக்கட்டும் தற்போது இரத்த சின்ன சங்கத்தின் தலைவனை பிடித்ததில் யாதும் சந்தேகமில்லையே "

" சந்தேகமாவது ! நாம் இந்த காரில் உட்கார்ந்திருப்பதைப் பற்றி எவ்வாறு சந்தேகப்படவில்லையோ அவ்வாறே சிறிதும் சந்தேகமில்லை "

" தற்போது தலைவன் அகப்பட்டபின், குலோரியாவும் அகப்பட்டே தீருவாள். இவனே அவள் செய்ததை யெல்லாம் சொல்லக் கூடும் " என்று கவலையுடன் டாம் சொன்னன்.

" கட்டாயம். இருந்தாலும் டாம், நீ என் குலோரியாவைப் பற்றி எப்பொழுதும் கவலைபடுகிருய் "

" அதுவும் தெரியாதா முட்டாளே; நான் அவளை நேசிக்கிறேன் " என்று கோபத்துடன் சொல்லியதும், தவருதலாக முட்டாள் என்று பதட்டத்தில் சொல்லியதை நினைத்து வருந்தி, இன்ஸ்பெக்டரிடம் மன்னிப்பு கேட்டான்.

இன்ஸ்பெக்டர் சிறித்துக்கொண்டே "நான் முட்டாள் என்பது எனக்கே தெரியும். இருந்தாலும் இந்த லண்டனில் நான் ஒருவன் மாத்திரம் முட்டாளல்ல. இருந்தாலும் என் பேச்சைக் கேள். குலோரியாவை மறந்துவிடு. அவள் பேரில் ஏதும் காதல் இருந்தால், அதை எனது தாயாரின் பக்கம் திருப்பு" என்ருர்.

இதற்கு ஏதாவது துடுக்காக பதில் சொல்லவேண்டு மென்று நினைத்தான். ஆனுல் கோபத்தை யடக்கிக் கொண்டான்.

இன்ஸ்பெக்டர் தனது வீட்டினுள் நுழைந்ததும், டாமுக்கு முன்பே உள் நுழைந்து "அம்மா! உன்னைப்பார்க்க டாமைக் கூப்பிட்டு வந்திருக்கிறேன். டாம்! உள்ளே வா, தாயாரைப்பார்"

டாம் அறையினுள் வந்ததும் ஸ்தம்பித்து நின்ருன். தனது முன்னுல் சிரித்த முகத்துடன் ஒரு பெண் நிற்பதைப் பார்த்தான். அவள் குலோரியா. இது ஒரு கனவா? என்றெண்ணினுன். அவள் முன் வந்து இவன் கையைப் பிடித்து மேஜையினருகே அழைத்துச் சென்ருள். மேஜையின் பேரில் மூவருக்கும் சாப்பாடு தயாராக வைக்கப்பட்டிருந்தது.

"அப்பா! கமிஷ்னரையும் கூப்பிட்டு வருவதாக சொன்னீர்களே!" என்று குலோரியா கேட்டாள்.

"அப்பாவா? உமது பாட்டி என்று சொன்னீர்களே!" என்று டாம் ஆச்சரியத்துடன் கேட்டான்.

"அப்பா எப்பொழுதும் வேடிக்கையாக பேசுவார்கள். எனது தாயார் இறந்தபின் நானே வீட்டு வேலைகளைக் கவனித்து வருவதால் என்னை 'அம்மா' என்று கூப்பிடுவது வழமை. பாட்டி கதை சொன்னது எல்லாம் பொய்".

"உனது தகப்பனுரா இவர்?"

குலோரியா தலையை யசைத்து "ஆம். நல்ல வேளையாக நீங்கள் துப்பறியும் வேலையில் ஈடுபடவில்லை. அப்படி யிருந்தால் என்னைப்பற்றி விசாரித்து கண்டு பிடித்திருப்பீர்கள். சரி தற்போது சாப்பிடுங்கள். இவைகளை நானே தயாரித்தேன்" என்ருள்.

டாம் இவ்விஷயங்களை யறிந்தபின் சாப்பிட மனமேயில்லை. சாப்பிட முடியவுமில்லை. குலோரியா இன்னும் என்ன சொல்லப் போகிருளென்று கூர்ந்து கவனித்த வண்ண மிருந்தான்.

"இரத்த சின்ன சங்கத்தின் முதல் கொலை நடந்ததும் அப்பாவுக்கு அந்த கேஸை கவனிக்கும் பொறுப்பு கொடுக்கப்பட்டது. அப்பொழுதே இந்த கேஸில் அப்பாவுக்கு சிரமம் அதிகம் இருக்கு மென்

லும் அப்படி சிரமப்பட்டாலும் கண்டு பிடிப்பது கஷ்டமென்றும அறிந்தேன். போலீஸ் தலைமை ஆபீஸிலேயே அநேகருக்கு அப்பா பிடிக்காது. அதனுல் கமிஷ்னர், இந்த கஷ்டமான கேஸில் தலையிட வேண்டாமென்று அப்பாவிடம் சொன்னர். கமிஷ்னருக்கு அப்பா பேரில் மிக பிரியம். ஆனல் அப்பா பிடிவாதமாக அந்த கேஸையே கேட்டு வாங்கினர். அந்த கேஸை வாங்கியதி லிருந்து கவலை தொட்டது. எனக்கு போலீஸ் வேலைகள் செய்வதில் மிக இஷ்டம். அப்பாவுக்கு இந்த கேஸ் கிடைத்ததும் இந்த சங்கத்தில் எவ்வாறு அங்கத்தினர்கள் சேர்க்கப் படுகிறர்க ளென்பதை அறிந்தேன். அப்பொழுது நானும் திருட்டுக் கூட்டத்தில் சேர்ந்தவளைப் போல் நடந்து கொண்டேன்.

ஆனல் நான் இத்தொழிலில் நுழைவதற்கு 3 மாதத்திற்கு முன்பே, உங்களது தகப்பனருக்கு இரத்த சின்ன சங்கத்தின் முதல் மிறட்டல் கடிதம் கிடைத்தது. அதற்கு 2-3 நாளைக்குப்பின் கிரீனிடம் நான் வேலைக்கு அமர்ந்தேன். ஏனெனில் கிரீன் வீடு உங்கள் வீட்டிற்கு பக்கத்தி லிருந்ததாலும், கிரீன் உமது தகப்பன ருடன் சிநேகிதமா யிருந்ததாலும், எனக்கு அங்கிருந்து உங்களது வீட்டைக் கவனிக்க வசதி யிருக்குமென்று நினைத்தேன். உங்களது தகப்பன ரிடத்திலேயே வேலைக்கு அமர முயற்சித்தேன். அது உங்களுக்குத் தெரியாதென்று நினைக்கிறேன். ஆனல் அவ்வேலை எனக்கு கிடைக்கவில்லை. உமது தகப்பனர் கொலை செய்யப்படும் போது நானும் அத்தோட்டத்தி லிருந்தேன். யார் சுட்டது என்று என்னல் பார்க்க முடியவில்லை. உமது தகப்பனர் விழுந்ததும், அருகே ஓடிப்போய் உதவி செய்யப் பார்த்தேன். சுட்டதும் இறந்ததால், உதவி பிரயோஜனப் படாதென்று அறிந்தேன். பிறகு நீங்கள் அங்கு ஓடி வருவதைப் பார்த்து, அச்சமயம் அகப்படாமல் தப்பி ஓடுவதே நலமென்று ஓடிவிட்டேன். அதுவுமல்லாமல் அச்சமயம் என்னிடம் ஒரு துப்பாக்கியும் வைத்திருந்தேன்.

உமது தகப்பனர் இறந்தபின், கிரீன் வீட்டிலிருப்பது பிரயோ ஜனமில்லை என்று நினைத்தேன். அத்துடன் எனக்கு இரத்த சின்ன சங்கத்தில் சேரவேண்டு மென்ற எண்ண மிருந்ததாலும் அதற்கு திருட்டு தொழிலில் ஈடுபடுபவளாக யிருக்க வேண்டு மென்றெண்ணி கிரீன் வீட்டில் திருடினேன். அதை அடமானம் வைக்கும் போது நீங்கள் என்னைப் பார்த்தது தற்செயலாக ஏற்பட்டதல்ல. எனது தகப்பனரின் யோசனைப்படி நீங்கள் மூவரும் வரும் சமயம் நான் அடமானம் வைக்க அந்த கடையினுள் புகுந்தேன். அப்பொழுது தான் ஸிம்ஸனுக்கும் நான் உண்மையான திருடி என்று மனதில்

பதியுமென்று அவ்வாறு செய்தோம். அதுவுமல்லாமல் அது முதல் திருடானதால் எனக்கு பெரிய தண்டனை யாதும் கிடைக்காது என்று தெரியும். ஆனால் எனது மதிப்பு அத்துடன் போயிற்று. பின்பு நாங்கள் எதிர்பார்த்தபடி இரத்த சின்ன சங்கத்தினிட மிருந்து எனக்கு கடிதம் கிடைத்தது. அதன்படி ஒரு இரவு எட்வர்ட் ஸ்கொயரில் இரத்த சின்ன சங்கத்தின் தலைவனைச் சந்தித் தேன். ஆனால் நான் சந்திக்கும் போதும் அதற்குப்பின் வீடு திரும்பும் போதும் எனக்கு பின்னால் எனது தகப்பனார் மறைந்து பார்த்துக் கொண்டே யிருந்தார். என்னை விட்டு பிரியவே யில்லை. இரத்தச் சின்ன சங்கம் எனக்கு முதலில் மாரீஸ் பாங்குக்கு போகுமாறு உத்தரவளித்தது. ஒரு அங்கத்தினரைக் கொண்டு மற்ற அங்கத்தினரை உளவு பார்க்க அனுப்புவது. இதுவும் ஸிம்ஸனின் பிரமாதமான யோசனை. அந்த பாங்கில் என்னால் மாரீஸின் குணத்தை அறிய முடிய வில்லை. முதலில் அவரும் இரத்த சின்ன சங்கத்தில் சேர்ந்தவரென்றே எனக்குத் தெரியாது. எனது தொழிலே திருட்டு வேலை என்பதை ருஜுப் படுத்த அந்த பாங்கிலும் திருட ஆரம்பித்தேன். அதனால் உண்மையான திருட்டு கூட்டத்தில் சேர சந்தர்ப்பம் கிடைத்தது. அதுவுமல்லாமல் ஹட் டன் இறக்கும் போது அதே வீட்டிலிருக்கும் சந்தர்ப்பமும் கிடைத் தது. பிறகு என்னை ஸிம்ஸனே வேலைக்கு அமர்த்தினார். தன் பேரில் சந்தேக மேற்படாதிருக்கவே அவ்வாறு செய்தார். பின்பு என்னை தொலைக்கவும் ஒரு வழி செய்தார். கிரீனை கொல்லும் அன்று என்னை ஒரு கத்தியும் கையுறையுடன் அந்த வீட்டிலே யிருக்க ஏற்பாடு செய்தார்.

“சரி, ஜெயிலிலிருந்து எப்படி தப்பித்தாய்?” என்று டாம் கேட்டான். அதற்கு அவள் சிரித்துக் கொண்டே “என்னால் ஜெயிலிலிருந்து தப்ப முடியுமா? ஜெயிலின் அதிகாரி என்னை திறந்து விட்டு, அங்கிருந்து என் வீடுவரை எனக்குத் துணைக்கு போலீஸ் அதிகாரியும் கூடவே வந்தார்” என்றாள்.

“ஸிம்ஸன் மனதில் குழப்பத்தை உண்டு பண்ணவே அவ்வாறு செய்தோம். குலோரியா ஜெயிலை விட்டு தப்பித்தாள் என்று தெரிந்ததும், ஸிம்ஸன் ஓடிவிட பார்த்தான். ஆனால் தனது ஆபீஸையும் வீட்டையும் இவள் சோதித்து முக்கியமான கடிதங் களை எடுத்துக் கொண்டா ளென்று அறிந்ததும், குலோரியா எதற் காக இவ்வாறு செய்கிறாள் என்று மனக் குழப்பமடைந்தார்” என்று பென்டன் சொன்னார். (தொடரும்)

தாரீகுல் குலபா

இஸ்லாமிய கலீபாக்களின் அரசாங்க சரித்திரங்கள்

நமது இஸ்லாமிய கலீபாக்களின் சரித்திர விஷயங் களைத் தெரிந்து கொள்ள வேண்டியது எல்லா முஸ்லிம் களுக்கும் அத்தியாவசியமான கடமையாகும். ஏனெனில் இச்சரித்திரங்களில் இஸ்லாமின் ஆரம்பமும், இஸ்லாத்தை நிலை காட்டிய தத்துவங்களும், இஸ்லாத்தின் பக்தி விசுவா சங்களும், இஸ்லாத்தின் சமத்துவங்களும், இஸ்லாத்தின் நீதி பரிபாலனங்களும் ஒருங்கே நிறைந்திருக்கின்றன. ஆதலின், இம்மகிமை பொருந்திய சரித்திரங்களை ஒவ்வொரு முஸ்லிமும் முஸ்லிம் அல்லாதாரும் அவசியம் வாசிக்க வேண்டும்.

இதில் முதற் பாகமாக நம் நபி பெருமானார் ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சரித்திரமும், முதல் கலீபாவாகிய ஹஸரத் அபூபக்கர் ஸித்தீக் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் சரித்திரமும் அடங்கியது. கிளேஸ் காகிதத்தில் கிரௌன் 8-பேஜ் சைஸில் அச்சிடப்பட்டு பைண்டு கட்டியது. விலை ரூ. 1—8—0

மேற்படி இரண்டாவது பாகம்: இதில் ஹஸரத் உமர் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் சரித்திரம் விரிவாய் எழுதப் பெற்றது. விலை ரூ. 1—4—0

மேற்படி மூன்றாம் பாகம்: இது ஹஸரத் உஸ்மான் (றலி) அவர்களின் கிலாபத்தும் ஹஸரத் அலி (ரலி) அவர் களின் கிலாபத்தும், ஹஸரத் இமாம் ஹஸன் (ரலி) அவர் களின் கிலாபத்தும், பனீ உமையாவின் கிலாபத்தும், அப்துல் மலிக் அவர்களின் கிலாபத்தும் ஆக 5-கிலாபத்து ஆட்சி வரலாறுகள் அடங்கியது. விலை ரூ. 1—4—0

மேற்படி மூன்று பாகமும் சேர்ந்தது ரூ. 3—8—0

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

(15-வது பகுதி)

திருக் குர்ஆன் : : : :

: : : : சார சங்கிரஹம்

பல விஷயங்கள் பற்றிய பல ஆயத்துகள்.

(ரஹ்மத் பாகவி)

ஈஸா நபி வானத்தில் உயர்த்தப்பட்ட விஷயம்

அந்த (யூதக்) காபிர்களின் பாதகச்செயல்களினாலும், அவர்கள் (தூய கன்னி) மர்யம் (அலை) மீது அவதூறு (ப்பழி) சுமத்தியதனாலும், இறைவன் அவர்களது ஹிருதயங்களின் மீது (அக்ஞான) முத்திரையைப் போட்டு விட்டான். மேலும் அன்னோர் தம்மை 'அல்லாஹ்வுடைய திருத்தூதர்' என்று சொன்ன மர்யமின் புதல்வர் ஈஸா (அலை) அவர்களை, அவரது சொல் காரணமாக, கொன்று போட்டார்கள். (அந்தரங்கம் யாதெனின்:) உண்மையில் அவர்கள் அவரைக் கொன்று போடவுமில்லை; அவரை சிலுவை(க் கொழு)யில் ஏற்றி அறையவும் இல்லை. ஆனால் அந்தச் சம்பவமாகிய அவ்விஷயம், அவர்கள் மீது (மாயா) சமுசய மாக்கப்பட்டு விட்டது. இது விஷயமாய் அவர்கள் தங்களுக்குள் தர்க்கித்துக் கொண்டு சந்தேகத்தில் கிடக்கிறார்கள். உண்மையில் நிகழ்ந்த தென்பது அவர்களு(டைய ஞானத்து)க்கு எட்டவே இல்லை. ஆனால் (மனம் போனபடி பேசி) சித்தக் குழப்பத்தில் சிக்கிக் கொண்டார்கள். மேலும், நிச்சயமாக (ஈஸா நபியாகிய) அவர் கொல்லப்படவே இல்லை. அல்லாஹு தஆலா அவரை, தன் புறம் (சமுகத்துக்கு) உயர்த்திக் கொண்டான். எனவே அல்லாஹ் (தஆலா), மிக மிகைத்தவனும் விவேக முடையவனுமாக இருக்கின்றான். (ஸூரா: அந்நிஸா; ருகூ: 22.)

ஈஸா நபி, அல்லாஹ்வின் ரஸூல்தான்; மகன் அல்ல!

ஏ வேதக்காரர்(களான யூதர்களே, கிறிஸ்துவர்)களே! நீங்கள் சன்மார்க்க விஷயங்களில் வரம்பைக் கடந்து போய் விடாதீர்கள். (தூய) இறைவன் விஷயத்தில் சத்திய சொல்லைத் தவிர்த்து வேறு எதையும் சொல்லித் திரியாதீர்கள்: (உண்மையில்) மர்யமுடைய மகன் ஈஸா மஸீஹ், அல்லாஹ்வுடைய திருத் தூதர் (ரஸூல்) மட்டுமே யாவர். ஆனால் அல்லாஹ்வுடைய ஆக்ஞையினால் (பீவி) மர்யமுடைய கர்ப்பத்தில் (அபூர்வமாய்) உண்டாக்கி வைக்கப்பட்டார். ஆகையால் அவர் அப்போது இறைவன் புறத்து ஒரு தூய ஆத்மாவாக மட்டுமே இருந்தார். எனவே, (ஜனங்களே,) நீங்கள் அல்லாஹ் மீதும், ரஸூல்களின் மீதும் (நேர்மையான முறைகளில்) ஈமான் (எனும் நம்பிக்கை) கொள்ளுங்கள். (தேவன், குமாரன்,

ஆத்மா என்பது போன்ற) மூன்று கடவுள்களின் பேச்சுகளை விட்டும் பேணிக் கொள்ளுங்கள். இதுதான் உங்களுடைய தன்மைக்கு நல்லதாகும். எனவே, அல்லாஹ் (என்னும் வணக்கத்துக்குரிய தெய்வம்) ஒரே ஆண்டவன்தான். அவனுக்கு குமாரன் உண்டாகலாம் என்ற (வீண்) பேச்சை விட்டும் அவன் மிகத் தூய்மையானவன். மேலும், வானத்திலும் பூமியிலும் உண்டாயிருப்பவையெல்லாமே அந்த (ஒரே) ஆண்டவனுக் குடையனவேயாகும். எல்லாக் காரியங்களுக்கும் கர்த்தன் அவனே யாவன். (ஸூரா: அந்நிஸா; ருகூ: 23)

மர்யமின் மகன் ஈஸாவை 'கர்த்தன்' என்போர் காபிர்களாவர்.

மர்யமின் புத்திரராகிய (இயேசு) மஸீஹை கர்த்தன் (என்னும் கடவுள்) என்று கூறுவோர், சந்தேக மின்றி, (பாபிகளாகிய) காபிர்களாவர். ஏ (முஹம்மத்) நபியே, எல்லாம் வல்ல இறைவன் அந்த மர்யமின் புத்திரர் மஸீஹையும், அவருடைய அன்னை (மர்யம்-அலை) யையும், மற்றும் உலகப் பரப்பின் மீது வதியும் (பாதகர்) அனைவரையும் ஒரே அடியாய் அழித்துப்போட விரும்பினாலும்—அவ்விறைவனைத் தடுத்துவிட யாரால் முடியும்? எனவே, வானத்திலுள்ளனவற்றின் மீதும் பூமியில் உள்ளனவற்றின் மீதும் (அடக்கி யாளும்) அதிகாரத் தன்மை அல்லாஹ்வுக்கே உரியதாகும். அவன் (சுயமே) இஷ்டப்படுவதையே செய்கின்றான். எனவே சகல விஷயங்களின் மீதும் அவன் மகா சக்தியுடையவன். தந்தை (யின் கலப்பு) இல்லாமலே ஒரு குழந்தையை (ஈஸாவை) உண்டாக்க அவனால் முடியும்; அவனே (குமாரன் ரூபத்தில்) உலகில் தோன்ற வேண்டிய அவசியமில்லை. (ஸூரா: அல்மாயிதா; ருகூ: 3)

ஈஸா நபி போதித்துக் கொண்டிருந்த விஷயமென்ன?

"தேவன் (ஆகிய கர்த்தன்) தான் இந்த மர்யம் மகன் மஸீஹ்" என்று சொல்லிக் கொண்டிருப்பவர்கள் பாபிகள் (பாபத்தால்) காபிர்களாகி விட்டார்கள். உண்மையில் அந்த மஸீஹ் என்னும் (ஈஸா) என்ன போதித்துக் கொண்டிருந்தார் என்றால்: "ஏ இஸ்ரவேல் கூட்டத்தார்களே! (எல்லாம் வல்ல) அல்லாஹ்வையே (தொழுது) வணங்குங்கள். அவனே எனக்கும் இறைவனாவன்; உங்களுக்கும் அவனேதான் இறைவன்; நான் அல்ல" என்பதாகும். எனவே, யாரேனும் (ஏக) இறைவனின் ஆண்டகைத் தன்மையில் (மஸீஹ் போன்ற வேறொன்றை) இணைப்பு உண்டாக்கி வைப்பானானால் அவ்விறைவனே அவன் மீது (கோபித்து) சுவர்க்கத்தை ஹராமாக்கி விடுகிறான். இறுதியில் அத்தகையோனின் ஒதுங்கும் தலம் நரகமேயாகும். இப்படிப்பட்ட அநியாயக் காரர்களுக்கு (இகபரத்தில்)

யாரும் உதவியாளராய் இருக்க மாட்டார். எனவே, (தேவன், ஆவி, பிள்ளை) மூன்றிலொன்றே கடவுள் என்று கூறுகிறார்களே (கிறிஸ்துவர்கள்) அவர்கள், காபிரானவர்களே யாவர். வாஸ்தவத்தில், ஏகனாகிய அல்லாஹ்வைத் தவிர்த்து வேறெதுவும் (எவனும்) வணக்கத்துக்குத் தகுதியாளன் இல்லை. இங்ஙனமிருந்தும், தவறான விஷயத்தை (தொடர்ந்து) சொல்லிக் கொண்டிருப்பவர்கள் குபிரான (காரியத்)தை செய்து உழல்பவர்களே யாவர். அன்னோர்க்கு இறுதியில் மிகக் கடுமையான வேதனை உண்டாகும். எனவே, இன்னோர் (இப்போதே) அல்லாஹ்வினிடம் தவ்பா செய்து பாப மன்னிப்புக் கோராதிருக்கின்றனரே! (அந்தோ!) ஆண்டவன் அனைவரையும் மகா மன்னிப்பவனாகவும் கிருபையாளனாகவும் இருக்கின்றானே! மேலும், மர்யமின் பிள்ளையான மஸீஹு (எனும் நபி ஈஸா கர்த்தன் அல்ல;) இறைவனின் (ரஸூல் எனும்) தூதர் மட்டுமேயாவர். இவருக்கு முன்னும் (இவரைப் போல்) அநேக தூதர்கள் வந்து போயிருக்கிறார்கள். மேலும் (மஸீஹாகிய) அவருடைய தாயார் (மர்யம்), மிகவும் சத்தியசீலி யாவர். (தாயும் மகனுமாகிய) இவ்விருவரும் மற்ற மனுஷ்யர்களைப் போல் தான் உணவு உண்டு உறங்கிக் கொண்டிருந்தனர். ஏ (முஹம்மத்) நபியே, பார்த்தீர்களா! இந்த (யூத, கிறிஸ்துவப்) பேர்வழிகள் என்னென்ன மாதிரியான அத்தாக்ஷிகளை யெல்லாம் (கற்பனை செய்து) கூறுகிறார்கள்! இதனால் இன்னோர் எந்தப் பக்கல் பின்னங் காலால் (பின்னோக்கி) நடக்கின்றார்கள் என்பதை உற்றுப் பார்ப்பீராக. (ஸூரா: அல்மாயிதா; ருகூ 10.)

மர்யமின் மகன் ஈஸாவும் கியாமத்தில் 'இது பற்றி' கேள்வி கேட்கப்படுவார்.

(உலக முடிவு) கியாமத்து நாளில், "அல்லாஹ் (தஆலா) இவ்வாறு (கேள்வி) கேட்பான் :—'ஏ மர்யமின் மகன் ஈஸாவே, நீர் உமது (கிறிஸ்துவ) ஜனங்களை நோக்கி: 'என்னையும் என்னுடைய தாயாரையும் நீங்கள், இறைவ (னாகிய கர்த்த)னை விட்டு இரண்டு வெவ்வேறு கடவுள்களாக (நம்பிக்) கொண்டாடுங்கள்' என்று சொல்லி யிருந்தீரா?" என்பதாகும். இதற்குப் பதிலாக (ஈஸா நபி) சொல்லுவார் :— "இறைவனே, உன்னுடைய தன்மை மிகப் பரிசுத்தமானதாகும். சொல்வதற்கு எனக்கு யோக்யதை (உரிமை) இல்லாத தொன்றைக் (கற்பனை செய்து) சொல்வது என்னால் முடியக்கூடிய காரியமா? அப்படி நான் (உலகினருக்குச்) சொல்லி யிருந்தால், அது உனக்கு (பகிரங்கமாய்) தெரிந்திருக்குமே! நீயோ (மனிதரின்) ஹிருதயங்களினுள் (எண்ணமாய்) இருப்பதை யெல்லாம் நன்கறியக் கூடியவனாயிற்றே! (கேவலம்) நானோ, உன்

187049

னுடைய எண்ணங்களைக் கூட அறியக் கூடியவனாக இல்லையே! மறைவான (கைபு) விஷயங்களை நீ தானே நன்கு அறிந்தவன்! எனது இரக்ஷகனே, நான் (என் கிறிஸ்துவ) ஜனங்களிடம் என்ன கூறி யிருந்தே னென்றால்: 'அல்லாஹ்வை (ஏக இறைவனாக) வணங்குங்கள். அவனே என்னுடையவும் உங்களுடையவும் ஏக இரக்ஷகனாக யிருக்கிறான்' என்று தான். மேலும் நான் (உலகில் ஜீவித்து) அவர்களுடன் இருந்த கால மெல்லாம், அவர்களை மேற் பார்வை செய்து கொண்டு தான் இருந்தேன். பிறகு என்னை நீ உலக (ஜீவிய)த்தி லிருந்து எடுத்துக் கொண்டாய். அதன் பின் நீ தான் அவர்களை மேற்பார்வையிட வல்லவனாகி விட்டாய். நீயே எல்லாப் பொருட்களைப் பற்றிய விஷய ஞானமுடையவனாக இருக்கின்றாய். (அவர்களுடைய வழி கேட்டிற்காக) அவர்களை நீ தண்டிப்பாயானால் (அது உன் இஷ்டம்;) அவர்கள் உன்னுடைய அடியார்கள்; (அங்ஙன மின்றி) அவர்களை நீ மன்னித்து விடுவா யானால் (அது உன் பெருமை;) நீயே மகத்தான விவேகமுடையவனாக இருக்கின்றாய்" (என்று ஈஸா நபி பதில் கூறுவார்). (ஸூரா: அல்மாயிதா: ருகூ 16.)

நூஹு நபிக் கூட்டத்தார் மீது இறைவன் இறக்கிய வேதனை.

(இறைவனாகிய) நாம், நூஹு (நபி) என்பவரை, அவருடைய கூட்டத்தாருக்கு ரஸூலாக ஆக்கி அனுப்பி வைத்தோம். அவர் ஜனங்களிடம் போய், "ஏ கூட்டத்தார்களே! அல்லாஹ்வையே நீங்கள் (யாவரும்) வணங்குவீர்களாக. அவனைத் தவிர்த்து வேறு தெய்வம் ஏதும் கிடையாது. நீங்கள் என்னுடைய இந்த இதோப தேசத்தை ஏற்று ஒழுகாமற் போய் விடுவீர்களாயின், (இதனால்) நீங்கள் மிகப் பெரியதோர் அதாபு (என்னும்) வேதனையில் சிக்கிக் கஷ்டப்படுவீர்கள் என்று அஞ்சுகிறேன்" என்று (வியக்தமாகக்) கூறினர். ஆயினும் அந்த (அட்டூழியக்) கூட்டத்தாரில் பெரிய மனிதர்களாக யிருந்தவர்கள், (நூஹு நபியை நோக்கி) "எங்கள் முன்னிலையில் (ஏ நூஹே) நீர் தான், மிகத் துலக்கமான வழி கேட்டில் இருப்பவராய் தோன்றுகின்றீர்!" என்று (எதிர் வாதம்) பேசினார்கள். அதற்கு நூஹு (நபி-அலை) "ஏ (அதமக்) கூட்டத் தினரே, நானல்ல வழி கேட்டில் கிடப்பவன்! நானோ சர்வ லோகங் களையும் (படைத்து) ரக்ஷிக்கும் இறைவனுடைய திருத்தூதனாக (ரஸூலாக) வந்திருக்கிறேன். உங்களுக்கு நான் எனது இரக்ஷகனு டைய திருத்தூதை (கொண்டு வந்து) ஒப்படைக்கின்றேன். மேலும் உங்களுக்கு (நல்ல) உபதேச மொழிகளைக் கூறுகின்றேன். இறைவன் எனக்கு மட்டும் கற்பித்ததும் நீங்கள் அறிய வியலாததுமான பரம

(ரகசியமான) விஷயங்களை நான் உங்களுக்குக் கூறுகின்றேன். என்ன, நீங்கள் ஆச்சரியப்படுகிறீர்களோ! உங்களிலேயே (பிறந்து வளர்ந்து) உள்ள ஒரு மனிதனுக்கு (எனக்கு), உங்கள் இரக்ஷகனுடைய திருப்போதனை எப்படி கிடைத்து விட்டதென்று ஆச்சரியப்படுகின்றீர்களோ! உங்களுக்கு வரப்போகும் வேதனையைப் பற்றி நான் எச்சரிக்கை செய்வது உங்களுக்கு வியப்பாக இருக்கிறதோ! (ஆச்சரியப்பட வேண்டாம்) ஜனங்களே! ஆண்டவனுடைய மகா கோபத்திலின்று தப்பித்துக் கொள்ள முயலுங்கள். ஒருக்கால் அவன், உங்கள் மீது கருணை புரிந்து அருள்வான்'' என்று (நூஹு நபி) போதனை செய்தார். அங்ஙனமிருந்தும் அக்கூட்டத்தார், அவரை பொய்ப்படுத்தி (மாறு பாடாய்) உழன்றூர்கள். எனவே (இறைவனாகிய) நாம் (வெள்ளம் அனுப்பி) நூஹையும் அவருடன் படகில் (ஏறி) இருந்த சில (நல்ல) பேர்களையும் (மகாப் பிரளய) வெள்ளத்திலிருந்து காப்பாற்றிக் கொண்டோம். மேலும் எங்களுடைய அத்தாக்ஷிகளை பொய்ப்படுத்தி உழன்றனரே அவர்களையெல்லாம் மூழ்கடித்து (அழிந்து போக) விட்டோம். ஏனெனில் அவர்கள் (அறிவுக் கண் இருந்தும்) குருடர்களாய்ப் போய் விட்டனர். (ஸூரா: அல்அஃராப்: ருகூ 8.)

அறபு தஃலீமுல் புர்கான் பீ எஸ்ஸர்னல் குர்ஆன்

இது சிறு குழந்தைகள் அரபி ஓத சுலபமாய் கற்றுக் கொள்ள, புதிய முறையில் எழுதியுள்ள அரபி காயிதா. இதில் ஒவ்வொரு பாடத்திற்கு முன்பும் அந்த பாடத்தை குழந்தைகளுக்கு எவ்வாறு கற்றுக் கொடுக்க வேண்டுமென்ற ஒஸ்தாத்மார்களுக்குக் குறிப்பும் அறபுத் தமிழில் போடப்பட்டுள்ளது. இதை அழகாக பெரிய எழுத்தில் எழுதி போட்டோ பிளாக் செய்து கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. இரண்டு பாகங்கள் சேர்ந்தது விலை அணா. 6

எஸ்ஸர்னல் குர்ஆன் லாகூர் ஸ்டைல் பெரியது அணா. 10

ஷெ சிறியது விலை அணா. 6

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

ஜவாஹிறுல் பவாயித்

ஆறும் பதிப்பு

இப்புத்தகத்தில் 1-வது அல்லாஹு தஆலாவின் திரு நாமங்களாகிய 'அஸ்மாஉல் ஹுஸ்னு' என்னும் அழகிய 99-இஸ்முகளும், ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே தர்ஜுமாக்களும் தக்ஸீறுகளும், காஸியத்துகளும், 2-வது அஸ்மா உல் இலாம், அதாவது நபிமார்கள் ஓதி வந்ததும் ஷர்ஜ விட்டும் தனித்ததுமான 40-அஸ்மாக்களும், அவைகளில் வெளியாகும் அநேக கைபியத்து அஜாயிபு, முஃஜிஸாத்து, அஸ்ரூறு முதலான மட்டில்லாத பிரயோஜனங்களும் 3-வது 'ஹயாத்துல் ஹைவான்' என்னும் உயிர் பிராணிகள் சகல ஜந்துகள் ஒவ்வொன்றின் குணகுணங்களும், அவைகளின் அவயவ மென்னும் அங்கங்களால் மனிதர்களுக்கு உண்டாகும் பற்பல வியாதிகளுக்கு அவிழ்தங்களும், இன்னும் ஹதீதுகளும், ஹிக்காயத்துகளும்; 4-வது மனுமுடைய தஃபீர் என்னும் கனவு நூலும், அதில் எவ்வண்ணமாய் கனவு கண்ட காக்ஷிகளுக்கு விரிவாகிய தஃபீர்களும், அதற்கு அத்தாக்ஷியாகிய அநேக ஹிக்காயத்துகளும்; 5-வது வைத்திய சுருக்க மென்னும் சகல வியாதிகளுக்கும் நுட்ப பரிகாரங்களும், இன்னும் அநேக பாயிதாக்களுமிருக்கின்றன. இவற்றின் அரபு இஸ்முகளை மாத்திரம் லெத்தோ கிருப்பில் அரபியிலும் மற்றவை யெல்லாம் சுத்த தமிழாலும் அச்சிட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டது.

விலை ரூ. 6—0—0

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

மூளை பலத்தால் முன்னேறியவர்.

'ஹென்ரி போர்டின்' வரலாறு

(முஹம்மது தாவூது)

(2—வது பகுதி)

புதிய இயந்திரம் திறம்பட இயங்கும் போதும் காலத்தை மிச்சப் படுத்தக்கூடிய உபாயம் கண்டு பிடிக்கப்பட்ட போதும் ஹென்ரி போர்டும் அவரது எஞ்சினீர்களும் மட்டற்ற மனமகிழ்ச்சி அடைவர். அப்போது அவர்களுக்குள்ள மன நிலையை விசித்திர, வினோத பொம்மை வைத்துக் கொண்டிருக்கும் குழந்தைகளின் மன நிலையைப் போன்றது. புதிய யோசனையைக் கூறிய மேஸ்திரி அல்லது தொழிலாளருக்கு உடனே சன்மானம் வழங்கப்படும். ஆனால், மறு நிமிடமே, இன்னும் திறம்பட இயந்திரம் இயங்கச் செய்யும் வழி வகைகளைக் கண்டு பிடிப்பதில் அவர்கள் மும்முரமாக முனைந்து விடுவர். மிகச் சிறந்த உபாயத்தை எவராவது கண்டு பிடித்து விட்டால், முன்பு கண்டு பிடிக்கப்பட்ட அதிசயக் கருவி உடைத்தெரியப்படும். இவ்வாறாக புதிய புதிய உபாயங்களைக் கண்டு பிடித்த வண்ண மிருந்தனர். எவரும் கண்டும் கேட்டும் இராத நூதன வழிகளில் முடியாது எனக் கருதப்படும் காரியங்களையும் சுலபமாகச் செய்து காட்டும் அதிசய இயந்திரத்தை உருவாக்கு வதோடு போர்டு ஸ்தாபன நிபுணர்களின் திறமை நின்று விடவில்லை. மற்றவர்கள் கண்டுபிடிக்கும் கருவிகளையும் அபிவிருத்தி செய்யும் அபார சாமர்த்தியமும் பெற்றிருந்தனர். எனவே, மோட்டார்கார் தொழிலில் ஈடுபட்டுள்ள மற்ற கம்பெனி ஆட்களும் இவர்களது வேலை முறையையும் இவர்களுடைய இயந்திரம் இயங்கும் முறையை யும் வந்து பார்ப்பதற்கு அனுமதிக்கப் பட்டனர்.

நிபுணர்களின் சாமர்த்தியம், சாதனைகள் ஆகியவற்றில் போர்டு நம்பிக்கை கொள்ளா திருந்ததே இத்தகைய காரியங்கள் நிகழ்வதற் குக் காரணமாக விருந்தது. அந்த மேதையின் அபிப்பிராயம் வருமாறு: எமது புதிய முயற்சிகளை மேற் கொண்டவர்கள் முன் அறிவு அல்லது அனுபவம் சிறிதும் இல்லாதவர்கள். முன்பின் பழக்கமில்லாத புதுத் துறைகளில் ஈடுபட்டு வேலை செய்து வந்தமை யால் முடியாத காரியங்கள் அல்லது விஷயங்களைப் பொறுத்தவரை அவர்கள் சகஜமான போக்கு அனுஷ்டிப்பதற்கு சந்தர்ப்பமே இல்லாதிருந்தது.

அவரது கருத்து சரியானது, அனுபவ சாத்தியமானது என்பதற்குக் கண்ணாடித் தொழில் ஒரு உன்னத உதாரணமாகும். பெரிய நாடாவில் கைவேலை யின்றியே (நிலைக்கண்ணாடி முதலியவை செய்வதற்கு உபயோகப்படும்) உயர்ந்தரகக் கண்ணாடி இடை விடாமல் செய்து கொண்டிருக்கலாம் என அவர் நினைத்தார். உலக கண்ணாடி நிபுணர்கள் இக்கூற்றைக் கேட்டு எள்ளி நகையாடினர். அம்மாதிரியான எண்ணம் முன்பே ஏற்பட்டு முயற்சிகள் செய்து பார்த்தும் அவ்வாறு செய்ய முடியாமற் போயிற்று என அவர்கள் கூறினர். கண்ணாடி தொழிற் சாலையில் முன்பு வேலை செய்திராத மனிதர்களிடம் அப்பொறுப்பை போட்டு ஒப்புவித்தார். அவர்களது முயற்சியும் வெற்றி யளித்தது. போர்டு கூறிய முறைப்படி உயர்ந்த ரக கண்ணாடி இப்போது செய்யப்பட்டு வருகிறது.

போர்டு ஸ்தாபன ஆட்களால் எந்த சமயத்திலும் எந்த காரியமும் செய்ய முடியும். இயந்திரக் கலப்பைகள் செய்யும் இயந்திரத்தை இடம் பெயர்த்து அயர்லாந்தில் அதனை நிலைநாட்டும் வேலை மிகச் சுலபமாகச் செய்து முடிக்கப்பட்டது. ஒரு சமயம், நீர் மூழ்கிக் கப்பல் எதிர்ப்புப் படகுகள் வேண்டுமென அமெரிக்க அரசாங்கம் தெரிவித்தது; அதே சமயத்தில், போர்டு ஸ்தாபனத்தின் இதர யுத்தகால தயாரிப்புகளையும் பாதிக்காமல் துரிதமாகப் படகுகள் செய்து தரவேண்டு மெனவும் அரசாங்கம் வற்புறுத்தியது. நூற்று இருபது நாட்களுக்குள் போர்டு ஸ்தாபன ஆட்கள் 1/3 மைல் நீளமும் 350 அடி அகலமும் 100 அடி உயரமுமுள்ள கட்டிடத்தை ரௌஜ் (Rouge) நதிக்கரையில் நிர்மானித்து, அக்கட்டிடத்துக்குள் எஃகினால் செய்த படகுகளை நிரப்பி, அப்படகுகளுக்கு எஞ்சின்களையும் இதர தளவாடங்களையும் பொருத்திக் கொண்டிருந்தனர். இந்த அபார சாதனையைப் புரிந்த மனிதர்கள் அதற்குமுன் படகு கட்டும் தொழிலில் வேலை செய்தறியாதவர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

போர்டின் வலக்கரம் போன்ற முக்கிய உதவியாளர்களில் முதன்மையானவர் டென்மார்க்கைச் சேர்ந்த சார்ல்ஸ் ஸொரன்ஸன் என்பவர். போர்டு கடையொன்றில் தினம் மூன்று டாலர் கூலி பெற்று வாழ்க்கை துவங்கிய இம்மனிதர் சீக்கிரம் ஒரு மேதையாகத் திகழலானர். இரண்டாவது உலகப் பெரும் போரில் அமெரிக்கா பிரவேசிப்பதற்குச் சற்று முன்பு கலிபோர்னியாவில் எவ்வாறு ஆகாய விமானங்கள் செய்கிறார்கள் என்பதைக் கண்டறிவதற்காக அந்நாட்டுக்கு அவர் சென்றார். போர்டு கம்பெனியும் ஆகாய விமானங்கள் செய்வதற்குத் திட்டமிட்டிருந்ததே அவரது இப்பிரயாணத்திற்குக் காரணம். கலிபோர்னியா கம்பெனி அதிபரிடம் ஸொரன்ஸன் சொன்னார்: ஆகாய விமானத்தின் உடலை முதலில்

கட்டி முடித்துப் பின்னர் சிறு துவாரங்கள் வழியாக எல்லா சாமான்களையும் இழுத்துச் சென்று அதற்குள் ஏன் பொருத்துகிறீர்கள் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

நீங்கள் எவ்வாறு செய்வீர்கள் என அவரிடம் வினவப்பட்ட போது அவர் கூறினர்: நான்கு பாகங்களாகப் பிரித்து அதனைச் செய்வேன். பின்னர், எல்லா பாகங்களையும் ஒன்று சேர்த்துப் பொருத்தி ஆகாய விமானமாக்கி விடுவேன்.

ஆகாய விமானம் கட்டும் முறையை இது மாற்றி விட்டது. மிச்சிகனிலுள்ள வில்லோரன் என்னுமிடத்தில் ஆகாய விமானம் கட்டும் போர்டு ஸ்தாபன இயந்திரத்தை ஸொரன்ஸன் கட்டினர். இந்த இயந்திரம் பின்னர் மணிக்கு ஒரு போர் விமானம் தயாரித்தது.

தனித்தனியே உறுப்புகளைச் செய்து பின்னர் அவற்றை ஒன்று சேர்த்துப் பொருத்துவதற்காக போர்டு ஸ்தாபனம் ஏற்படுத்திய நிலையம் உலகப் பிரசித்திப் பெற்றது. உலகிலே நிர்மாணிக்கப்பட்ட உறுப்புகளை ஒன்று சேர்க்கும் முதல் நிலையம் அதுதான். கைத்தொழில் முறைகளில் புரட்சிகர மாறுதலை அது தோற்றுவித்தது. சிகாகோவில் இறைச்சியைப் பக்குவம் செய்து 'பாக்' செய்பவர்கள் உபயோகிக்கும் வண்டியின் ரீதியில் இது அமைக்கப்பட்டது. பன்றி இறைச்சியில் ஒரு பாகத்தை இறைச்சியை பக்குவம் செய்து 'பாக்' செய்பவர் வெட்டி யெடுத்து அடுத்த நபரிடம் எஞ்சிய பாகத்தை தள்ளி விடுவதும் மற்றொரு பாகத்தை அந்நபர் வெட்டி யெடுத்து எஞ்சியதை பிறித்தொருவரிடம் தள்ளி விடுவதும் வழக்கமாக யிருந்தது. இறைச்சி பக்குவப் படுத்துபவர்கள் தமது வேலைக்காக உபயோகித்துக் கொண்ட தள்ளு வண்டியைக் கவனித்து அதே ரீதியில் விமானங்கள் கட்டும் முறை உருவாக்கப் பட்டது. போர்டு ஸ்தாபனம் உருவாக்கிய இம்முறை விஞ்ஞான ரீதியில் உருவாக்கப் படவில்லை என்பதும் அது கற்பனை சக்தி, விவேகம், முயற்சி, ஊக்கம் ஆகியவற்றின் விளைவு என்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது.

பொதுவான இலட்சியங்களைப் பொறுத்தவரை போர்டுக்கு இரு விஷயங்கள் மட்டுமே தெரியும். அவையாவன: (1) ஒரு ஆள் ஒரு அடிக்கு அதிகமாக எடுத்து வைத்து நடந்து செல்வதைத் தவிர்க்க முடியுமானல், ஒரு அடிக்கு மேல் அவன் மற்றொரு அடி வைத்துச் செல்லாமல் இருந்த இடத்திலே இருக்க வேண்டும். அதாவது, அந்த ஆள் அப்படியே அங்கேயே நிற்கவேண்டும்; அவன் செய்ய வேண்டிய வேலை அவனுக்கு அந்த இடத்திலேயே கிடைக்கச் செய்ய வேண்டும். (2) குனிந்து நின்று வேலை பார்ப்பதால் எந்த மனிதனும் காலத்தையும் சக்தியையும் வீணக்கக்கூடாது.

அதாவது, அவனது இடுப்பு உயரத்தில் அவனது வேலை இருக்க வேண்டும்.

பன்னிரண்டாயிரம் தொழிலாளர்களில் ஒவ்வொருவருக்கும் தினந்தோறும் பத்து அடி மிச்சப்படுத்தினால் ஐம்பது மைல் வீண் நடையையும் அனாவசிய சக்தி விரயத்தையும் தவிர்க்கலாம். ஒழுங்கு முறை இல்லாமல் வேலை செய்யும் தொழிலாளி தளவாடங்களைத்தேடி அலைவதில் வீணாக்கும் நேரம், அவன் வேலை செய்யும் நேரத்தைவிட மிக அதிகமானது. நடை போடுதல் நன்மை பயக்கும் (லாபம் தரும்) செயல் அன்று என்று அவர் கருதுகிறார்.

ஹென்ரி போர்டின் குறிக்கோள் ஒன்றுதான். அதாவது, காலத்தை வெல்லுதல். தொழிலாளி ஒருவன் தேவையான தளவாடங்களையும் கருவிகளையும் தேடி அங்கும் இங்கும் அலைவதைத் தவிர்த்து அவனுக்கு அவசியமான சாமான்களை அவன் இருக்கும் இடத்திற்குக் கொண்டு செல்லவும் ஒரு இயந்திரத்திலிருந்து மற்றொரு இயந்திரத்துக்கு சாமான்களை நகர்த்திச் செல்லவும் சமநிலையிலுள்ள சரிவு பலகைகளும் இயந்திர சூத்திரமும் பயன்படுத்தப்பட்டன. உபநிலையங்களில் இக்காரியங்களெல்லாம் நிகழ்ந்தன. உபநிலையத்தில் பூர்த்தி செய்யப்படும் ஒரு தளவாடத்துக்கு எஞ்சின் ஒரு உதாரணம். எஞ்சினின் நூற்றுக்கணக்கான பாகங்கள் இங்கு ஒன்று சேர்க்கப்பட்டு பொருத்தப்படுகின்றன. பின்னர், மோட்டார் உடலுக்குள் (பிரேமுக்குள்) எஞ்சின் பொருத்தப்படுகிறது. பழைய முறைப்படி, ஒரு தொழிலாளி போர்டு எஞ்சினின் பல பாகங்களையும் ஒன்று சேர்த்துப் பொருத்தி வந்தார்; எஞ்சின் பூர்த்தியாகும் வரை அவர் அங்கும் இங்கும் அலைய வேண்டியதாக யிருந்தது. இந்த வேலை, புது முறைப்படி, 84 தனித் தனி வேலையாகப் பிரிக்கப்பட்டது. ஒரு மனிதன் ஒரே இடத்தில் அசையாமல், அலையாமல் அப்படியே நின்று ஒரு வேலையைக் கவனிக்க வேண்டும்; அவரது இடத்திற்கு எஞ்சின் வந்ததும் அவருக்கு இடப்பட்ட வேலையை அவர் செய்து முடிக்க வேண்டும். இம்மாதிரி ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வேலையைப் பிரித்துக் கொடுக்கப்பட்டது. வேலை முறையில் செய்யப்பட்ட இம்மாறுதலின் விளைவாகக் குறிப்பிட்ட நேரத்தில் 84 பேர் 84 எஞ்சின்களைப் பொருத்தி வந்ததற்குப் பதிலாக இப்போது அதே நேரத்தில் 84 பேர் 252 எஞ்சின்களைப் பொருத்த முடிந்தது.

(தொடரும்)

Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

187049

மஜ்முஇவுல் அன்வார் பீ மதாயிஹிற் றஸூலி வல்அப்றார்

இந்த கிதாபில் நமது நாட்டில் வழக்கமாய் ஓதி வருகிற ஸூப்ஹான மௌலிது, மௌலிது பர்சந்ஜி, மௌலிது ஹூசேன் (றலி), மௌலிது முஹியத்தீன் (றலி), மௌலிது ஷாஹூல் ஹமீது (றலி) ஆக ஐந்து மௌலிதுகளும், யாசெய்யதி யாகுத்பா முதலிய அநேக விடுண்பத்துகளும் அடங்கி யிருக்கின்றன. ஷை மௌலிதுகளுடைய பைத்துகளெல்லாம் தடித்த கலத்தினுல் பெரிய எழுத்தில் எழுதப்பட்டு போட்டோ பிளாக்கில் அச்சிடப்பட்டது. கிளேஸ் காகிதம் கலிகோ பைண்டு செய்யப்பட்டுள்ளது.

இதன் ஹதியா ரூ. 6—0—0

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹூல் ஹமீது அண்டு ஸன்ஸ்

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

பத்ஹுர்ரஹ்மான் பில்பிக்ஹின் னுஃமான்

(ஹனபி மதுஹபுக்குரியது)

பிரயோஜனமான கல்வி, பிரயோஜன மில்லாத கல்வி என்று இரண்டு வகையுண்டு. உலக வாழ்வை மட்டும் நமக்கு எடுத்துச் சொல்வது பிரயோஜன மில்லாத கல்வி. நம் மனமும் ஒழுக்கமும் சீர்பெற்று மறுமையில் நமக்கு ஈடேற்றம் தரக்கூடியதே பிரயோஜனமான கல்வியாகும்.

தீனுல் இஸ்லாத்தின் தத்துவங்களையும், அனுஷ்டான முறைகள் என்னும் பிக்ஹு மஸ்அலாக்களையும் கற்றறிந்து அமல் செய்ய வேண்டியது ஒவ்வொரு முஸ்லிமுடையவும் கடமையாகும். இதுதான் இம்மை, மறுமை இரு லோகத்தில் பிரயோஜனம் தரவல்லது.

இந்த நூலில் ஒவ்வொரு முஸ்லிமும் அறிந்து ஒழுக வேண்டிய எல்லா விஷயங்களும் அடங்கி யிருக்கின்றன. உதாரணமாக ஈமான், இஸ்லாம், கலிமா, பரிசுத்தம், தொழுகை, ஜும்ஆ மகிமை, ஜியாரத்துல் குபூர், ஜக்காத்து, நோன்பு, ஹஜ்ஜு முதலிய மஸ்அலாக்களும், இஸ்லாமிய ஒழுக்கமும், ஸுன்னத்தின் சிறப்பு, ஸபருடைய ஒழுக்கம், இபாதத்தின் மகிமை மற்றும் சகலவிதமான போதனைகளும் அடங்கி யிருக்கின்றன.

நல்ல சுத்த தமிழில் இனிய நடையில் எழுதப்பட்ட புதிய நூல்—புதிய பதிப்பு. ஆங்கு அரபு மொழியில் ஓத வேண்டிய கலிமா, துஆ முதலானவைகள் அறபிலேயும் அமைக்கப்பட்டுள்ளன. இதன் அருமை நேரில் பார்த்தால் தான் தெரியும். இதன் விலை ரூ. 3 0 0

ஷை அறபுத் தமிழ் அல்பத்ஹுர் றப்பானி-பி-பிக்ஹே னிஃமானி விலை ரூ. 5 0 0

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.